ஆடவர், வனிதையர்
விரும்பும் அழகு
வண்ணப் புடைவைகளுக்கு

சிறந்த இடம்:

ச. லிங்கநாதன்
வண்ணச்சோலை
13, 14, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
(சி-513)



பக்கங்கள்: ஆறு

Registered as a NewsPaper

# உதயன்

விலை
ரூபா
5-00



முகூர்த்தப்
பட்டுப் புடைவைகளை
தெரிவு செய்திட

இன்றே நாடுங்கள்

ச. லிங்கநாதன்
வண்ணச் சோலை
13, 14, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
[சி-513]



சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 10 புதன்கிழமை (22 – 02 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 90


# பாதை திறப்பு விவகாரத்தில் புரிந்துணர்வு; எரிபொருள், மீன்பிடித் தடைகள் நீங்கலாம்

## 4ஆம் கட்டப் பேச்சு வார இறுதியில்?

கொழும்பு, பெப்ரவரி 22

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான பாதையை திறப்பது குறித்து அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒன்று ஏற்பட்டுள்ளதாகவும்—

பெற்றோல், டீசல் ஆகிய எரிபொருள்கள் மீதான தடை, இரவு நேர மீன்பிடித் தடை ஆகியவற்றை நீக்குவது குறித்து தாம் பரிசீலனை செய்வதாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளதாகவும்—

கொழும்புப் பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டுள்ளன.

இத்தகைய பின்னணியில், அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நான்காம் கட்டப் பேச்சுக்கள் இவ்வார இறுதியில் நடக்கக்கூடும் என்று "லங்காபுவத்" ஊகம் தெரிவித்துள்ளது.

பாதை திறப்பு விவகாரத்தில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒன்று ஏற்பட்டுள்ளதாக அரசாங்க வட்டாரங்களை மேற்கோள் காட்டி, அரசுசார்புப் பத்திரிகையான ''சண்டே ஒப்சேர்வர்'' செய்தி வெளியிட்டுள்ளது.

எரிபொருள்கள், மீதான தடை, இரவு நேர மீன்பிடித் தடை ஆகியவற்றை நீக்குவது குறித்து பரிசிலனை செய்வதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளார் என்று ''சண்டே ஐலண்ட்'' செய்தி வெளியிட்டிருக்கிறது.

போக்குவரத்துப் பாதை குறித்து ''சண்டே ஒப்சேர்வரில் தெரிவிக்கப்பட்டுள்ள

( 6 ஆம் பக்கம் பார்க்க)

ஊழலில் ஈடுபட்ட

## முன்னாள் அமைச்சர்கள் இருவர் விரைவில் கைதாவர்

கொழும்பு, பெப். 22

ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகியுள்ள இரண்டு முன்னாள் ஐ.தே.க. அமைச்சர்கள் அடுத்த சில வாரங்களில் கைது செய்யப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான சகல ஆவணங்களும் தயார் செய்யப்பட்டிருப்பதாக ''சண்டே ஐலண்ட்'' தகவல் வெளியிட்டுள்ளது.

விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் இவர்கள் நிறுத்தப்பட்டு விசாரணை செய்யப்படுவார்கள் என்றும் —

அவ்விசாரணைகள் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்றும் —

மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## எம்.பிக்களுக்கு 'பஜரோ' ஜீப் வழங்கும் திட்டம் வாபஸ்

கொழும்பு, பெப். 22

பொதுமக்களிடமிருந்து கிடைத்து வரும் அழுத்தம் காரணமாக எம். பிக்களுக்கு 'பஜரோ' கொள்வனவு செய்யும் திட்டத்தை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு கைவிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது

அரசு மற்றும் எதிர் தரப்பு எம். பிக்களுக்கு என 82 விலையுயர்ந்த கார்கள் மற்றும் பஜரோஜீப்புக்களை கொள்வனவு செய்ய அரசு திட்டமிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. ]உ]

## அராலித்துறையில் கண்ணிவெடி ஒத்திகை!

கொழும்பு, பெப் 22

ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ மற்றும் ஒன்பது படை அதிகாரிகளும் கொல்லப்பட்ட இடமான அராலித் துறைக்கு, அக்கொலைகள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட விசேட ஜனாதிபதி ஆணைக்குழு கடந்த வியாழனன்று விஜயம் செய்தது.

சம்பவதினம் படை அதிகாரிகளை ஏற்றிச்சென்ற லாண்ட் றோவர் டிபென்டர் நிலக்கண்ணியில் சிக்கி வெடித்துச் சிதறியது தெரிந்ததே. அந்தச் சம்பவம் போன்ற நிலக் கண்ணி வெடித் தாக்குதல் ஒத்திகை ஒன்று, ஆணைக்குழு உறுப்பினர்கள் நேரில் அவதானிப்பதற்காக அராலித் துறையில் கடந்த வியாழன் செய்து காட்டப்பட்டது.

இந்த நிலக்கண்ணித் தாக்குதல் வீடியோவில் பதிவு செய்யப்பட்டது. புகைப்படங்களும் எடுக்கப்பட்டன.

அச்சமயம் வெடிகுண்டை செயலிழக்கச்செய்யும் படைப் பிரிவினர் மற்றும் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகளும் சமுகமளித்திருந்தனர்.

இந்த ஆணைக்குழுவின் தலைவராக நீதியரசர் நிஸ்ஸ டயஸ் பண்டாரநாயக்கா இருக்கிறார். (உ-எ)

## ராணுவ அதிகாரிகளை விசாரிக்க ஆணைக்குழு

கொழும்பு, பெப் 22

சேவையிலிருந்து ஓய்வு பெற்ற இருவர் உட்பட நான்கு இராணுவ உயரதிகாரிகள் புரிந்ததாகக் கூறப்படும் ஊழல்கள் குறித்து விசாரணை செய்வதற்கு விசாரணைக் குழு ஒன்றை அமைப்பது என அரசு தீர்மானித்துள்ளது.

''லங்காதீப'' சிங்களப் பத்திரிகை இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

இந்த நால்வரும் தமது சேவைக்காலத்தில் புரிந்ததாகக் கூறப்படும் ஊழல்கள், லஞ்ச நடவடிக்கைகள் ஆகியவை குறித்து விசாரிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-10]

## ஜனாதிபதிக்கு மிக நம்பிக்கையான தனி ராணுவப்படை அமைக்கப்படும்?

"ஹிரு" பத்திரிகை தகவல்

கொழும்பு, பெப். 22

இராணுவ சட்ட திட்டங்களுக்கு உட்படாமல் — வேறுபட்ட சட்டங்களை கொண்ட —ஜனாதிபதிக்கு நம்பகமாகச் செயற்படக்கூடிய — விசேட இராணுவக்குழு ஒன்றை அமைப்பதற்கு ஸ்ரீலங்கா அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக ''ஹிரு'' சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த விசேட இராணுவக் குழு. இராணுவ நீதிமன்ற விசாரணைகளுக்கு உட்படாது தனியொரு இரகசிய சபையினால் விசாரிக்கப்படும்.

இந்தப் படைப் பிரிவில் பணிபுரியும் சிப்பாய்களுக்கு சாதாரண படையில் இருக்கும் சிப்பாய்களை விட இருமடங்கு சம்பளம் வழங்கப்படும்.

இப்பிரிவு ஜனாதிபதியின் மிக நம்பிக்கைக்குரிய அமைப்பாக இயங்கும்.

இப்படைப் பிரிவை பாதுகாப்பு அமைச்சினாலோ இராணுவத் தளபதியினாலோ கட்டுப்படுத்த முடியாது.

இவர்களுக்கு விசேட பயிற்சிகளை வழங்க அமெரிக்க இராணுவ நிபுணர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது

—இவ்வாறு அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

## 92இல் பிரேமா குடும்பத்தின் உணவுச் செலவு ரூ.40 லட்சம்!

கொழும்பு. பெப் 22

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா தமக்கும் தமது குடும்பத்தினரதும் உணவுச் செலவாக 1992 ஆம் ஆண்டில் மட்டும் 40 லட்சத்து 37 ஆயிரத்து 626 ரூபா 39 சதத்தைச் செலவு செய்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

தபால் மற்றும் தொலைத் தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர இந்த புள்ளி விவரங்களை அண்மையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

பிரேமதாஸா குடும்பத்தினர் அந்த ஆண்டில் தமக்குத் தேவையான உணவு வகைகளை ஐந்து நட்சத்திர ஹோட்டல்களான கலதாரி மெரிடியன், ஹில்டன், தாஜ்சமுத்ரா ஆகியவற்றில் இருந்து பெற்றார்கள் என்றும்—

மார்ச் மாதத்தில் மட்டும் அவர்களின் உணவுச் செலவு 7 லட்சம் ரூபா என்றும் அமைச்சர் சொன்னார். [உ-எ]

## எம்.பிக்கள் - அதிகாரிகள் கசப்புணர்வு வலுக்கிறது!

கொழும்பு,பெப்.22

அரசுத் தரப்பு எம். பிக்களுக்கும் அரசாங்க உயரதிகாரிகளுக்கும் இடையில் கசப்புணர்வு வலுவடைவதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

அரசாங்க நாடாளுமன்றக் குழுக்கூட்டங்களிலும், வேறு மாநாடுகளிலும் நிதி அமைச்சைச் சேர்ந்த ஒரு சில அதிகாரிகள் தம்மை அவமானப் படுத்தும் விதத்தில் செயற்பட்டுள்ளனர் எனக் குற்றஞ்சாட்டும் அரச எம். பிக்கள் இது தொடர்பாக விசாரணையொன்றை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியிடம் கோருவதற்கு முடிவு செய்துள்ளனர்.

இதற்கிடையில் வரவு—செலவுத் திட்டம் தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் அமைச்சர் ஒருவர் தன்னை ஏசி அவமானப்படுத்தியதாக நிதி அமைச்சைச் சேர்ந்த உயரதிகாரி ஒருவர் எழுத்து மூலமாக ஜனாதிபதிக்கு முறையிட்டுள்ளார்

''லங்காதீப'' சிங்கள வார இதழ் இத்தகவலை வெளியிட்டிருக்கிறது. (உ-10)

## முற்போக்கு முன்னணி கூச்சல் போருக்கு முஸ்தீபு

கொழும்பு. பெப். 22

''1995 ஜூலை 25 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதாக இன்றைய ஜனாதிபதி எமக்கு எழுத்து மூலம் உறுதியளித்திருக்கிறார். அந்த வாக்குறுதியை அவர் நிறைவேற்றாது போனால் நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும் வரை நாம் கூச்சல் போராட்டங்களை நாடு முழுவதிலும் நடத்துவோம்''.

— இவ்வாறு இலங்கை முற்போக்கு முன்னணியின் தலைவர் ஆரிய புலகொட எச்சரித்திருக்கிறார்.

மாத்தறை உயன்வத்தை விளையாட்டு உள்ளரங்கில் இடம்பெற்ற முன்னணியின்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஜனநாயகம் மீதான நம்பிக்கையை புலிகள் புலப்படுத்தி உள்ளனர்!

கொழும்பில் வாசுதேவ

கொழும்பு, பெப். 22

தென்பகுதி சமாதானத் தூதுக்குழுவை யாழ்ப்பாணத்திற்கு விஜயம்செய்ய அழைப்பு விடுத்ததன் மூலம் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் ஜனநாயகத்தில் தமக்குள்ள நம்பிக்கையைப் புலப்படுத்தி உள்ளனர்.

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் சமாதான யாத்திரை மேற்கொண்டு கொழும்பு திரும்பிய பின்னர் தூதுக்குழுவின் தலைவர் திரு. வாசுதேவ நாணயக்கார கொழும்பில் செய்தியாளர் மாநாடொன்றில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் நடைபெற்ற பொதுக் கூட்டங்களில் பெருமளவில் திரண்டிருந்த தமிழ் மக்கள் நாட்டில் சமாதானத்தை மீண்டும் நிலைநாட்டுவதில் தாங்கள் திட

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கொழும்பு கோட்டையில் கொள்ளை!

கொழும்பு கோட்டைப் பகுதியில் நேற்று பிற்பகல், வெளிநாட்டு கரன்சி வர்த்தகம் செய்யும் ஒருவரிடமிருந்து ஒரு லட்சம் ரூபா துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-4)

## குவாக்கர் சமாதானக் குழு திரும்பியது

யாழ். வந்திருந்த குவாக்கர் சமாதானக் குழுவினர் ஐந்து பேரும் நேற்று இங்கிருந்து கிளாலி ஊடாக கொழும்பு பயணமாகினர்.

இக்குழுவினர் கடந்த ஞாயிறு முகிழமை விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை சந்தித்து இன்றைய அரசியல் மற்றும் சமாதான பேச்சுவார்த்தையின் நிலை குறித்து கலநதுரையாடியதாகத் தெரிவிக்கப்படுகிறது (உ-4)

## யாழ்ப்பாணத்தை சென்று பாருங்கள்!

போர் வெறியருக்கு பிக்கு அழைப்பு

போர் வெறியர்களே! யாழ் சென்று அவலங்களைஒருமுறை பாருங்கள். யாழ். மக்கள் பெருந் துயரத்துடன் வாழ்கிறார்கள். இடிந்த கட்டடங்களையும் மக்களின் அவலங்களையும் கண்ட போது எங்கள் கண்களில் நீர்த்துளிகள் பனித்தன.

— இவ்வாறு யாழ்ப்பாணம் சென்று திரும்பிய சமாதானத் தூதுக் குழுவில் அங்கத்துவம் பெற்றிருந்த மாமங்கட வல ரத்தின தேரர் வவுனியாவில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் —

யுத்த கொடூரம் யாழ்ப்பாணத்தில் தெரிகிறது. யுத்தம் பற்றிப் பேசுபவர்களுக்கு நான் சொல்லக்கூடியது வடக்கே சென்று ஒரு முறை யாழ்ப்பாணத்தைப் பார்த்து விட்டு வாருங்கள் என்பது தான் — என்றார்.

தடையை மீறி பொருள்களை அனுப்ப உத்தரவிட்ட

## பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரி விரைவில் கைது செய்யப்படுவார்

கொழும்பு, பெப். 22

வட பகுதிக்குத் தடைசெய்யப்பட்ட பொருள்களை எடுத்துச் செல்லும் உத்தரவில் கையெழுத்திட்டதாகக் கூறப்படும்பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த முன்னாள் உயர்நிலை அதிகாரி ஒருவரும் வேறு இரண்டு அரசியல்வாதிகளும் விரைவில் கைது செய்யப்படுவாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் உயர் நிலை அதிகாரி அனுமதி வழங்கி கையெழுத்திட்ட ஆவணம் தற்போது அரசாங்கத்தின் கைவசம் இருப்பதாக ''சண்டே ஐலண்ட்'' தகவல் வெளியிட்டிருக்கிறது.

அந்த உத்தரவின் மீது வட பகுதிக்கு அனுப்பப்பட்ட பொருள்கள் கைப்பற்றப்பட்டு வவுனியாவில் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மோசடியில் இராணுவ பிரிகேடியர் ஒருவர் சம்பந்தப்பட்டிருந்தாலும் அவருக்கு எதிராக திடமான சாட்சியங்கள் இல்லை என்றும் —

எனினும் இந்த பிரிகேடியர் அரசதரப்பு சாட்சியாகமாறும் சாத்தியம் [illegible] கவும் — மேலும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

முச்சந்தி முரளி



அப்பா...... நல்லாத் திண்டு [illegible] போலை......!

## வடக்கு புனரமைப்புக்கு ரூ. 4,000கோடி வழங்குவதற்கு பிரிட்டன் இணக்கம்

வட பகுதி புனரமைப்புக்கு 1 கோடி 60 லட்சம் டொலர் (சுமார் நான்காயிரம் கோடி ரூபாவுக்கும் அதிகமான) தொகையை உதவியாக வழங்குவதற்கு பிரிட்டன் இணங்கியிருக்கின்றது.

உத்தியோகபூர்வ வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு செய்தி நிறுவனங்கள் இவ்வாறு அறிவித்தன.

தற்போது கொழும்பு வந்துள்ள பிரிட்டிஷ் வர்த்தக அமைச்சர் றிச்சர்ட் நீடாமுக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களின் போதே இந்த உதவி குறித்து இணக்கம் காணப்பட்டது.

வடக்கில் மின்சார சக்தியுடன் தொடர்புடைய தொழில்களை ஆரம்பிக்க பிரிட்டன் விரும்புவதாக அந்நாட்டு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வடபகுதி புனரமைப்புக்கு 4 ஆயிரம் கோடி ரூபா வரை தேவைப்படும் என ஸ்ரீலங்கா அரசு மதிப்பிட்டிருந்தது தெரிந்ததே.

அந்தத் தொகையைப் பெறுவதற்கு வெளிநாடுகளின் உதவியை கோருவது என்று அரசு முடிவு செய்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. (உ-7-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நெஞ்சகலா நினைவில்...

மண்ணில்: 01 — 11 — 1908



விண்ணில்: 21 — 01 — 1995

## பேதுருப்பிள்ளை ஆசீர்வாதம்
*(இளைப்பாறிய தலைமை ஆசிரியர்)*

''ஆஸ்திக் கிரிகை''

இவரின் ''ஆஸ்தி'' 14/2, கோயில் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து புனித. யுவானியார் ஆலயத்துக்கு புதன்கிழமை இன்று (22-02-95) பிற்பகல் 4.30 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, நிகழும் திருப்பலியின்பின் யாழ். மரியன்னை சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும். அனைவரையும் இதில் பங்குபற்றி செபிக்கும்படி அழைக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

14/2, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

(35313)

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

பிறப்பு: 27 - 03 — 1916



இறப்பு: 13 — 01 — 1995

## திருமதி
## சுப்பிரமணியம் சிவரத்தினம்

13-1-1995 காலை நடைபெற்ற எமது தாயார் திருமதி சு. சிவரத்தினம் அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்

இன்று (22-2-95) புதன் காலை 7 மணிக்கு நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு நடைபெறும் சபண்டீகரணம், மதிய போசனம் ஆகியவற்றிலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

மகன்: கே. எஸ். பாஸ்கரதாசன் (ஆசிரியர்)
யா/வல்வை மகளிர் மகாவித்தியாலம்,
மகன்: சு. காளிதாஸ் (திக்கம் வடிசாலை),
மருமகன்: திரு. த. திருஞானசம்பந்தபிள்ளை,
மகள்: திருமதி தி. பரமேஸ்வரி.
இன்பருட்டி.

(சி-592)

*தீவகத்தின் முதுபெரும் கூட்டுறவாளர்*
அமரர் உயர்திரு
## அம்பலவாணர் பொன்னுத்துரை
அவர்களுக்கு எமது
# இதய அஞ்சலிகள்

அன்னை மடியில்: 28 — 03 — 1911



ஆண்டவன் அடியில்: 20 — 02 — 1995

தீவகத்தின் மூலை முடுக்கெல்லாம் கூட்டுறவை எடுத்துச்சென்று மக்களுக்கோர் கூட்டுறவு வழிகாட்டியாக இறுதிவரை இருந்து அமரத்துவம் எய்திய அமரர் உயர்திரு பண்டிதர் அம்பலவாணர் பொன்னுத்துரை அவர்களுக்கு வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது இதய அஞ்சலிகளைச் செலுத்துகின்றது.

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள், அங்கத்தவர்கள்.
வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

(சி/652)

# சிலை திருடும் கும்பல் தமிழகத்தில் கைது

சென்னை, பெப். 22

தமிழகத்தில் உள்ள பல்வேறு கோயில்களில் இருந்து சிலைகளைத் திருடி, கடத்தி விற்கும் பெரிய கும்பல் ஒன்றை தமிழகப் பொலிஸார் வளைத்துப் பிடித்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக இதுவரை 15 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும்—

நாற்பது சிலைகள் வரை மீட்கப்பட்டிருக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் சென்னை விமான நிலையத்தில் வைத்து ராஜேஷ் லம்பா என்ற முக்கிய புள்ளி கைதுசெய்யப்பட்டதாகவும்—

இவரது கைதை அடுத்து அவர் கொடுத்த தகவலின் அடிப்படையில் பம்பாயில் மற்றொரு முக்கிய புள்ளி கைது செய்யப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

சிலை கடத்தலில் முக்கிய பேர்வழி எனக் கருதப்படும்— பிரிட்டனைச் சேர்ந்த— நிக்கல் நித்தியானந்த் றேகன் என்பவரை தமிழகப் பொலிஸார் நேற்று முன்தினம் பம்பாயில் வைத்துக் கைது செய்தனர் என்று—

தமிழக சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு தலைமை இயக்குநர் வைகுந்த்சென்னையில் தெரிவித்தார். [உ]

## தட்டச்சு பரீட்சை

யாழ்ப்பாணம், பெப். 22

தமிழீழ நிர்வாக சேவையின் தட்டச்சு — சுருக்கெழுத்துப் போட்டிப் பரீட்சை எதிர்வரும் 2 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என்றும் —

விண்ணப்பதாரிகள் தமது அனுமதி அட்டைகளை தமது செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் —

தமிழீழ நிர்வாக சேவைப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (உ)

## கூடைப்பந்தாட்ட போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப். 22

ஹட்டன் நஷனல் வங்கியின் யாழ். கிளை யாழ். மாவட்ட ரீதியில் யாழ். பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடத்திவரும் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

★ 3-30 மணி:- பல்கலைக் கழக 'பி' அணி எதிர் ஜொனியன்ஸ் அணி.

★ 4-30 மணி:- சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி அணி.

[எ-14]

## சாரணர் நாள் விழா இன்று

வடமராட்சி, பெப். 22

உலக சாரணர் நாள் பருத்தித்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தினால் இன்று புதன்கிழமை பிற்பகல் கொண்டாடப்படவுள்ளது.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில், அதிபர் திரு. ந. அனந்தராஜ் தலைமையில் நடைபெறும் இக் கொண்டாட்டத்தில், பருத்தித்துறை மாவட்ட சாரணர் கிளைச்சங்கத் தலைவரும், மேலதிக அரசாங்க அதிபரும், பிரதேச செயலருமான திரு. ஆ. சிவசுவாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். [அ-173]

## பாடசாலைகளில்

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை வருடாந்த இல்ல உடல் வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நாயன்மார்கட்டு ஸ்ரீ கலைமகள் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

[எ-14)

★ ★ ★

கைதடி கலைவாணி வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி அதிபர் திரு. ப. செல்வத்துரை தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும் (உ)

★ ★ ★

சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை வியாழக்கிழமை பாடசாலை அதிபர் திரு. எஸ். விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது [எ-5-11]

★ ★ ★

சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலய பரிசளிப்பு, நிறுவுநர்தின விழா நாளை பிற்பகல் 2.30 மணிக்கு அதிபர் திரு. சு. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்.

கல்விவலயம் இரண்டின் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி முதன்மை விருந்தினராகவும்—

உடுவில் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

நிறுவுநர் உரையை ஆத்மஜோதி நா. முத்தையா நிகழ்த்துவார் (ஊ-152)

## உயர்விலை முத்திரைகளுக்கு தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ் பிரதமதபாலகத்தில் நூறு ரூபா, ஐந்நூறு ரூபா, ஆயிரம் ரூபா பெறுமதியான முத்திரைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இம் முத்திரை வகைகளை உடனடியாக கப்பலில் அனுப்பிவைக்குமாறு கோரும் செய்தி ஒன்றை யாழ். பிரதம தபாலதிபர். சு. கோடீஸ்வரன் கொழும்பு பிரதம தபாலகத்துக்கு அனுப்பிவைத்துள்ளார். [க-17]

# இன்று நடப்பவை

வீரவேங்கை லவனிதா நினைவு வீரவணக்கக் கூட்டம் நாவற்குழி லவனிதா குடியிருப்பில் குடியிருப்புப் பொறுப்பாளர் திரு தேவன் தலைமையில் இன்றிரவு 7.30 மணி முதல் நடைபெறும்.

விடுதலைப் புலிகள் பிரமுகர்களின் உரையும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

★ ★ ★

யாழ் மாவட்ட சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் சாரணஸ்தாபகர் பேடன் பவல் தின விழா இன்று பிற்பகல் 3.30மணி முதல் யாழ் இந்துக்கல்லூரியில் இடம்பெறும்.

யாழ் மாவட்ட சாரணர் ஆணையாளரும் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபருமான திரு. இ. மகேந்திரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்ச்சியில் பேடன்பவல் தினத்தை ஒட்டி நடத்தப்பட்ட பேச்சு குழுப்பாடல், தனிப்பாடல் வினாடிவினா போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்களும் வழங்கப்படும். (உ)

★ ★ ★

சாவகச்சேரி வாரிவனேஸ்வரம் இந்துமகளிர் மன்றம் நடத்தும் சிறப்புக்கருத்தரங்கு இன்று பிற்பகல் 2மணிக்கு சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் ''சிவராத்திரி மகிமையும் அதனை அனுஷ்டிக்கும் முறையும்'' என்னும் பொருளில் ஆத்மஜோதி நா. முத்தையா கருத்துரை வழங்குவார்.

(எ-31-14)

★ ★ ★

இருபாலை தமிழ் மாமன்றம் நடத்தும் இலக்கிய முற்றம் -ஒன்பதாவது தொடர் நிகழ்வு இன்று பிற்பகல் 3மணிக்கு மன்றத்தில் நடைபெறும். (ஐ-30-14)

# கண்ணீர் அஞ்சலி

பண்டிதர்
## அம்பலவாணர் பொன்னுத்துரை

எமது பள்ளியில் பலவருடங்கள் ஆசிரியராக சேவையாற்றி, பின்னர் அதிபராக பதவிவகித்து பள்ளியின் வளர்ச்சிக்கு சகல வழிகளிலும் அயராது அரும்பணியாற்றிய அன்னாருக்கு அஞ்சலி செலுத்துவதுடன், அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணாக்கர்,
பழைய மாணாக்கர்,
பள்ளி அபிவிருத்திச் சபை,
யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயம்.

[35320]

# இதய அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதிபேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் தந்தையார்;
கல்வியாளரும் சமூக, சமயத் தொண்டருமாகிய
வேலணையூர் அமரர்

பண்டிதர்
## அம்பலவாணர் பொன்னுத்துரை
அவர்களுக்கு எமது இதய அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக
புவியியற்றுறையினர்.
(35326)

# வட இலங்கை
# தொழில் நுட்பக் கல்லூரி
## COMPUTER PROGRAMMING IN PASCAL LANGUAGE
(TURBO PASCAL VER 5 5)

## ஆரம்பம்: 25 - 02 - 1995

18 - 2 - 95 ஆரம்பமாக இருந்த வகுப்புக்கள் தவிர்க்க முடியாத காரணத்தினால் 25 - 2 - 95 (சனிக்கிழமை) 3-00 மணிக்கு ஆரம்பமாகும் என அறியத்தருகிறோம்.

- ★ அனுபவமும், திறமையும் வாய்ந்த விரிவுரையாளர்களின் சிறந்த சேவை.
- ★ குறைந்த கட்டணமும், போதிய செய்முறைப் பயிற்சியும்.
- ★ கல்வித் தகைமை, ஆகக்குறைந்தது O/L.

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, St. Peter's Lane, Hospital Road,
JAFFNA.

(சி/386)

# A/L 95
## மீட்டல்

கிறிஸ்தவம்:-
Mrs. A. மல்லிகா

நாடகமும்
அரங்கியலும்:-
Mr. எல்விஸ்

**SHAMROCK**
யாழ். சுண்டுக்குளி
(35223)

யாழ். மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்
# பிரதேச மன்றப் பொதுக்கூட்டம்

மேற்படி சங்கத்தின் பிரதேசமன்றங்களின் பிரதேச மன்றக்குழு தெரிவுக்கான பொதுக்கூட்டங்கள் நடைபெறவுள்ளன. விவரம் கீழ்வருமாறு:

| பிரதேசமன்றம் | கூட்டத்திகதியும் நேரமும் | இடம் |
|---|---|---|
| 1. யாழ்ப்பாணம் 2 நல்லூர் 3. வலிகாமம் கிழக்கு [கோப்பாய்] | 25-02-95 மு ப 9-30 | யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம். சங்க தலைமை அலுவலகம், திருநெல்வேலி கிழக்கு. கோப்பாய். |
| 4. வலிகாமம் தெற்கு [உடுவில்] | 26-02-95 மு. ப 9-30 | யா/உடுவில் மான்ஸ் த. க. பாடசாலை சுன்னாகம் பொதுசன நூலகத்திற்கு அருகிலுள்ள ஒழுங்கையில். |
| 5 வலிகாமம் மேற்கு (சங்கானை] | 26-02-95 மு ப 9-30 | சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை |
| 6. வலிகாமம்- தென் மேற்கு வலிகாமம் வடக்கு (சண்டிலிப்பாய்- தெல்லிப்பழை) | 26-02-95 மு. ப. 9-30 | மணிமேகலை சனசமூக நிலையம், சீரணி, சண்டிலிப்பாய் தெற்கு, சண்டிலிப்பாய் |
| 7. தென்மராட்சி (சாவகச்சேரி) | 26-02-95 மு. ப. 10-00 | சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கண்டி வீதி, சாவகச்சேரி. |

மேற்படி கூட்டத்திற்கான அறிவித்தல் நிகழ்ச்சி நிரலுடன் ஒவ்வொரு அங்கத்தவரது விலாசத்திற்கும் 16 - 02 - 95 இல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. விலாச மாற்றங்களினால் அறிவித்தல் கிடைக்கப்பெறாதவர்களும் இவ்வறிவித்தலை ஏற்று கூட்டத்திற்கு தவறாது சமுகம் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

— கௌரவ செயலாளர்.

(சி/653)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கத்தினரின்
# கண்ணீர் அஞ்சலி

பண்டிதர்
## அம்பலவாணர் பொன்னுத்துரை
[இளைப்பாறிய அதிபர், வேலணை]

எமது சங்கத்தின் உப தலைவர்களில் ஒருவரான பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் தந்தையார் காலமாகியதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அவரது, குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்.

[சி-651]

# 32-ம் நாள் நினைவலைகள்

மண்ணில் மலர்வு: 19 — 12 — 1939



விண்ணில் மலர்வு: 22 — 01 — 1995

## செல்வி திலகவதி தம்பையா

தங்கக் கல்வி தனைத்
தந்திட்ட தாயவளே
பங்கமிலா நின் பண்பு
பாரினில் நிலைக்கையில்
எங்கு முனைத் தேடுகின்றோம்
ஏமாந்து வாடுகின்றோம்
இங்கனொன்று தீர்ந்தாலும்
தீர்ந்திடுமோ நம் துயரம்?

உன் ஆத்மா சாந்தியுற என்றென்றும் பிரார்த்திப்போம்.

சுன்னாகம் பழைய பாடசாலை
மாணவர்களும், பெற்றோர்களும்.

[8258)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். போதனா வைத்தியசாலையில்

# கால் கடுக்க நின்று சிகிச்சை பெறும் பல் நோயாளர்களின் வேதனை

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ். போதனா வைத்திய சாலைக்கு பல் சிகிச்சைக்கு செல்லும் நோயாளிகள் தாங்கள் பல சிரமங்களை அனுபவிக்க வேண்டியுள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர்.

பல் நோயாளிகள் இலகுவாக அச்சிகிச்சை நிலையத்துக்குச் செல்ல முடியாது எனவும் —

அவர்கள் வெளி நோயாளர் பகுதியில் தடுத்து வைக்கப்பட்டு பின் சிகிச்சை ஆரம்பமானதும் குறிப்பிட்ட சிறு தொகையினராகக் கூட்டம் கூட்டமாக அழைத்துச் செல்லப்படுகின்றனர் எனவும் —

இதனால் காலை 6 மணியில் இருந்து 11 மணிவரை அவர்கள் கால் கடுக்க நிலையாய் நின்று சிகிச்சை பெற்றுச் செல்ல வேண்டியுள்ளது எனவும் அறியவருகின்றது.

மேலும், வெளிநோயாளர் பகுதியில் பல் நோயாளிகளுக்கு அமர அனுமதியில்லை. அவர்கள் குறிப்பிட்ட நேரம் வரை கியூவில் நிற்கவைத்தே அழைத்துச் செல்லப்படுகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தினமும் பல் சிகிச்சைக்காக 200க்கு மேற்பட்ட நோயாளிகள் வைத்திய சாலைக்குச் செல்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

[க-15]

## இளங்கலைஞர் மன்ற இசை விழாவில் நாளை

இளங்கலைஞர் மன்றத்தின் பதினைந்தாவது ஆண்டு இசைவிழாவின் 13 ஆம் நாளான நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு ரி. பாலகிருஷ்ணன், எம். ஆனந்தா குழுவினரின் மங்கள இசை இடம்பெறும்.

5 மணிக்கு மன்ற மாணவிகளின் பாட்டு, வீணை இசை 5-40 மணிக்கு சசிரேகா பஞ்சமூர்த்தியின் புல்லாங்குழல் இசை 6 மணிக்கு நாகச்சந்திரா அரவிந்தன், தயானி நாகச்சந்திரா ஆகியோரின் வீணை இசை, 6-20 மணிக்கு வசந்தி சத்யநாதன் பாட்டு. இரவு 7-05 மணிக்கு அருட்செல்வி யேசுதாசனின் வீணை இசை. 8 மணிக்கு எஸ். பத்மலிங்கம், ஆர். குகானந்தன் பாட்டு 9-10 மணிக்கு தென்மராட்சி திலக நர்த்தனாலய மாணவிகள் வழங்கும் பரதநாட்டியம் என்பன இடம்பெறும்.

அருட்திரு. எஸ். கில்லறி ஜெயநேசன் அடிகள் தலைமையில் 'சிற்றி மெடிக்கல்ஸ்' ஆதரவில் நடைபெறும் நாளைய நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் திரு. கே. பொன்னம்பலமும், சிறப்புவிருந்தினராக மருத்துவபீடத்தைச் சேர்ந்த அருட்திரு எஸ். டேமியனும் கலந்துகொள்வர்:

[எ-14-111]

## நிர்வாக அதிகாரி

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ். போதனா வைத்திய சாலையில் நிர்வாக நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தராக திரு. க. நாகலிங்கம் கொழும்பு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். ஆஸ்பத்திரியில் கடந்த பல வருடங்களாகச் சேவையாற்றி வரும் இவர் பதவி உயர்வுடனே இப்பதவிக்கு இம் மாதம் 1 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி பதவி கடந்த 5 ஆண்டுகளாக வெற்றிடமாக இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

(க-15)

பத்து ஆண்டுகளாக

# முத்திரையிடப்படாத நிறுத்தல் அளவைகள் பாவனை கண்டுபிடிப்பு

கடந்த 10 வருடங்களாக முத்திரையிடப்படாத நிறுத்தல் அளவை உபகரணங்களில் பாவனையாளர்களுக்கு பொருள்கள் விநியோகித்து வந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பாவனையாளர்களிடம் இருந்து கிடைத்த புகார்களை அடுத்து கடந்த வாரம் உள்நாட்டு வியாபாரத் திணைக்களத்தைச் சேர்ந்த நிறுவை அளவைகள் பரிசோதகர்களால் குடாநாட்டில் உள்ள வர்த்தகத் திணைக்களக் கிளைகளில் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனையின் போது இவ்விடயம் தெரிய வந்துள்ளது.

அன்றைய தினம் சம்பந்தப்பட்ட வர்த்தகத் திணைக்களத்தின் கிளையில் சீனி வாங்கி வந்த பாவனையாளர்களின் சீனியை நிறுத்துப் பார்த்த போது மூன்று கிலோ சீனியில் 100 கிராமும், இரண்டு கிலோ சீனியில் 75 கிராம் சீனியும் குறைந்திருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

இதனையடுத்து சம்பந்தப்பட்ட வர்த்தகத் திணைக்களத்தின் கிளை மேல் நடவடிக்கை எடுப்பதற்காக வர்த்தகத் திணைக்களத்தின் வட பிராந்திய உதவி ஆணையாளருக்கு இது விஷயம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

வடக்கு — கிழக்கில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட பின் உள்நாட்டு வியாபாரத் திணைக்களத்தின் கீழ் பதியப்பட்டிருந்த பாவனையாளர் சங்கங்கள் இயங்காமையே இவ்வாறாக நிறை குறைத்து பொருள்கள் விநியோகிக்கும் சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் நடப்பதற்கான காரணங்களாகுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

(எ-4)

## புலிகளின் குரல் வானொலியில்

22 — 02 — 1995

புதன் இரவு

- ★ 8-01 — குயிலோசை நிகழ்ச்சியில் ''ஆனந்த சீலன்'' நாட்டுக்கூத்து
- ★ 8-20 — ஏர்முனை ''கால் நடைகளுக்கான வெட்டுப்புல் வளர்ப்பு'' கேள்வி பதில்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — நாடகம் — அளவைக்குமரன் எழுதிய ''சூரியனும் கண்கெட்ட சில மனிதர்களும்

23 — 02 — 1995

வியாழன் காலை

- ★ 7-02 — மாவீரர் வணக்கம்
- ★ 7-15 — விடுதலைக் கீதங்கள்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி ஒலிபரப்பு

புதன் மாலை

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிக் கீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — படப்பாடல்கள்
- ★ 5-30 — அறிவூற்று
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
- ★ 6-02 — உங்கள் தெரிவு
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — உங்கள் தெரிவு நிகழ்ச்சியின் தொடர்ச்சி
- ★ 6-30 — மாலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## திருநிலை வைபவம்

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ். மறை மாவட்டத்தைச் சேர்ந்த புதிய மறைப்பணியாளர் நால்வருக்கு திருநிலைப்படுத்தும் வைபவம் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பேராலயத்தில் நடைபெறும்.

அருள்சகோதரர்கள் வி.இ. இரவிச்சந்திரன், கயோன் லொறற், சுவாம்பிள்ளை ஸ்ரனிஸ், லோறன்ஸ் றெனால்ட் ஆகியோருக்கு யாழ். ஆயர் தோமஸ்சவுந்தரநாயகம் ஆண்டகை திருநிலைப்படுத்தி வைப்பார்.

[க-17]

5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சை

# ஆகக்குறைந்த சித்தி எய்தும் புள்ளி நாடு முழுவதும் ஒன்றாக இருக்கும்

### கல்வி அமைச்சர் உத்தரவு

கொழும்பு, பெப். 22

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையப் பெற வேண்டிய ஆகக் குறைந்த புள்ளியை நாடு முழுவதற்கும் பொதுவாக நிர்ணயிக்க வேண்டும்.

கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரான முன்கண்டவாறு அமைச்சு அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

மாவட்ட அடிப்படையில் ஆகக் குறைந்த சித்தி எய்தும் புள்ளியை நிர்ணயிக்க வேண்டாம் என்றும் அவர் பணித்துள்ளார்.

இதே வேளை—

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையாதோரின் புள்ளிகளும் இனிமேல் வெளியிடப்படும் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் இம்முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஆண்டு நடத்தப்பட்ட ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையாதோரின் புள்ளிகளை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் ஆர் தர்வெதமுல்ல தெரிவித்தார்.

(எ)

## 3 ஓட்டுத் தொழிற்சாலைகள் ''ஓஸியில்'' கொள்வனவு

முன்னைய ஐ.தே.க. அரசின் காலத்தில் தனியாருக்கு விற்பனை செய்யப்பட்ட மூன்று மிகப்பெரிய ஓட்டுத் தொழிற்சாலைகளுக்கு உரிய பணத்தை, அந்தத் தொழிற்சாலைகளைக் கொள்வனவு செய்தவர்கள் அரசுக்கு இது வரை செலுத்தவில்லை.

திட்டமிடல் பிரதி அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே இந்த முறைகேட்டைக் கண்டு பிடித்திருத்திருப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது

(உ)

## விசேட விடுமுறைக்கு பதில் மேலதிக வகுப்புகள்

### கல்வி அமைச்சர் உத்தரவு

கொழும்பு, பெப். 22

பல்வேறு காரணங்களுக்காக பாடசாலைகள் மூடப்படும் ஒவ்வொரு தினத்திற்காகவும் மேலதிக வகுப்புக்களை நடத்துவது கட்டாயமாக்கப்படவிருக்கிறது.

சகல பாடசாலைகளும் இந்த ஒழுங்கு விதியை பின்பற்ற வேண்டுமென்று கல்வி உயர் கல்வி அமைச்சர் றிச்சார்ட் பத்திரன தெரிவித்துள்ளார்.

விஷேடமாக விடுமுறை வழங்கும் நாட்களுக்கு பதில் வகுப்புக்களை நடத்தும் நடைமுறை பல பாடசாலைகளில் பின்பற்றப்படவில்லை என்று தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும், இது குறித்து விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

[ஐ-4]

## வலி. தெற்குப் பிரதேசத்தில் வீதிஅபிவிருத்தி திட்டங்கள்

புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைத் திட்டங்களை மேற்கொள்ளும் போது வலிகாமம் தெற்குப் பிரதேசத்தில் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டிய வீதி அபிவிருத்தித் திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன

உரும்பிராய் — மானிப்பாய் வரை செல்லும் பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் இருந்து காங்கேசன்துறை செல்லும் பிரதான வீதியின் எஞ்சிய பகுதிகள் மற்றும் கந்தரோடை புத்தூர் வரை பாடசாலை வீதி ஆகியன முன்னுரிமை அடிப்படையில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்று வலி தெற்கு பிரதேசச் செயலர் திரு. ஆ. மகாலிங்கம் வீதி அபிவிருத்தி அதிகார சபையைக் கோரியுள்ளார்.

இதேவேளை — பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் சுன்னாகம் பெரிய மதவடியில் இருந்து இணுவில் வரையான காங்கேசன்துறை பிரதான வீதியும் திருத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(எ-152)

## வாய்க்கால் புனரமைப்பு

மானிப்பாய் பகுதியிலுள்ள மருதடிக்குளமும் அதனோடு தொடர்புடைய 2 ஆயிரம் அடி நீளமான வாய்க்காலும் அண்மையில் தேசநிர்மாணிகளால் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இந் நீர்ப்பாசன வாய்க்கால் ஆழமாக்கப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

(எ)

## ஆணையாளராக இராமநாதன் நியமனம்

கொழும்பு, பெப். 21

ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் விஜே குமாரதுங்காவின் படுகொலை பற்றி விசாரணை நடத்தவிருக்கும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. பி. இராமநாதன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாக மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசர் சரத் சில்வா, மேல்நீதிமன்ற நீதிபதி தர்மசிறி ஜெயவிக்ரம ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

[எ]

# தமிழ்மக்களின் முழுமையான அபிலாசைகளை நிறைவேற்றும் தீர்வை அரசு முன்வைக்க வேண்டும்

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் பி. பி. ஸி. தமிழோசைக்கு அளித்த பேட்டி இங்கு முழுமையாகப் பிரசுரமாகிறது.

## 'தமிழோசை'க்கு அளித்த பேட்டியில் தமிழ்ச்செல்வன்

கேள்வி: இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான அமைதிப் பேச்சுக்களில் முடக்க நிலை ஏற்பட்டதற்குக் காரணம் என்ன?

பதில்: சமாதானப் பேச்சுக்களில் ஒரு மந்தநிலை ஏற்பட்டுள்ளது என்பது ஓரளவு உண்மையே. ஏனென்றால் இதுவரை 3 கட்ட பேச்சுக்கள் நடைபெற்றிருக்கின்றன. பேச்சுவார்த்தை தொடங்கி 4 மாதங்கள் ஆகின்றன. இது வரை நடைபெற்ற 3 கட்ட பேச்சுக்களிலும் இருதரப்பினராலும் பேசி இணக்கம் காணப்பட்ட விடயங்களில் அனேகமானவை இந்த அரசினால் நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ளது. அரசாங்கமே முதலில் பேச்சுகளுக்கு வரும்போது தனது நிலைப்பாட்டை வெளியிட்டது. அதாவது வட பகுதியில் வாழும் மக்கள் இன்று அன்றாடம் அனுபவிக்கும் அவலங்கள் துன்பங்களை களைந்து நாட்டின் ஏனைய பகுதி மக்கள் வாழுகின்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். இதுவே தங்கள் ஆரம்ப கட்டப் பேச்சுக்களில் பேசி இணக்கம் காணப்பட வேண்டியதென அரசு, இந்த நிலைப்பாட்டை எடுத்தது. ஆனால் இந்த 3 கட்ட பேச்சுக்களினாலும் எமது மக்கள் எதிர்பார்த்த இந்த மாற்றங்களும் நன்மைகளும் அவர்களுக்கு கிடைக்கவில்லை. இன்று மக்கள் நாளாந்தம் அனுபவிக்கும் அவலங்கள், பிரச்சினைகள், தடைகள் அனைத்துமே இராணுவத்தோடு சம்பந்தப்பட்டவை. அதனால் அரச தாக்குதல் இராணுவத்தினராலேயே இங்கு பேசி வாக்குறுதி அளித்துவிட்டுச் சென்றாலும், அவற்றை நடைமுறைப் படுத்த முடியாமல் இருக்கின்றது. இதுவே இன்றைய பேச்சின் மந்த நிலைக்கு காரணம்.

கேள்வி: நீங்கள் புதிய புதிய நிபந்தனைகள் விதிப்பதாகவும், உங்கள் தரப்பிலிருந்து பகைமை நிறுத்த மீறல் சம்பவங்கள் இடம் பெறுவதாகவும் அரசும் இராணுவமும் குற்றச்சாட்டுகளை எழுப்பி வருகின்றனவே?

பதில்: நாம் புதிய புதிய நிபந்தனைகளை விதிக்கவில்லை. நாம் இன்று கேட்பது அனைத்துமே எமது மக்களின் மிகவும் அவசியமான; அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்கும்படியே கேட்கின்றோம். அரச பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே நாம் இக்கோரிக்கைகளை விடுகின்றோம். இன்று எமது மக்களில் மிகவும் அவசியமானதும் அவசரமுமானதுமான உடனடியாக தீர்த்து வைக்கப்பட வேண்டிய பிரச்சினைகளையும் அரச பிரதிநிதிகளால் வாக்குறுதி அளித்து சென்ற விடயங்களையுமே நடைமுறைப் படுத்தும்படி நாம் வலியுறுத்துகின்றோம். இவற்றை புதிய புதிய நிபந்தனைகளை நாம் விதிக்கின்றோம் என்று அரசு கூறுவது உண்மைக்கு புறம்பானதும் ஒன்று தாக்குதல் நடவடிக்கை நிறுத்த மீறல்கள் இடம் பெறுவதாக அரசும் இராணுவமும் கூறுவது தவறானது. பல இடங்களில் தாக்குதல் நிறுத்தம் மீறப்பட்டுள்ளது. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் இராணுவம் புதிய புதிய நிலைகளை அமைத்தது. மக்கள் மீதான கெடுபிடிகளை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துகிறது. எமது போராளிகள் ஆயுதங்களோடு நடமாடக்கூடாது என தெரிவித்துள்ளது எமது போராளிகள் கைது செய்யப்பட்டு ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதும் இவற்றின் பாரதூரமான போர் இடை நிறுத்த மீறலாகும்.

கேள்வி: பெரும்பான்மையான பொருள்கள் மீது விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டுவிட்டதாக அரசு கூறுகிறது. இது உங்கள் நிபந்தனைகளில் ஒன்று பொருளாதாரத்தடை எந்தளவிற்கு நீக்கப்பட்டிருக்கிறது?

பதில்: பொருளாதாரத் தடை தளர்த்தப்பட்டுள்ளதாக அரசு பல தடவை அறிவித்தல்களை விடுத்துள்ளது; பல பொருள்களின் தடைகள் நீக்கப்பட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளது ஆனால் தடை நீக்கப்பட்ட பொருட்கள் போதியளவு இங்கு வந்து சேரவில்லை. இதற்கு இரு முக்கிய விடயங்களில் அரசு முடிவெடுக்கவில்லை.

ஒன்று, தளர்த்தப்பட்ட பொருள்கள் மிகவும் சொற்ப அளவில் வவுனியாவில் உள்ள தடைமுகாமில் இராணுவத்தினரால் மட்டுப்படுத்தப்படுகின்றது. அவையும் இராணுவத்தினரால் லஞ்சம் பெற்றே அனுமதிக்கப்படுகின்றது.

இரண்டாவதாக மிகவும் அவசியமானதும் அனைத்து நாளாந்த செயல்பாட்டுக்கும் தேவையான எரிபொருள்களுக்கு தடை விதித்திருப்பதால் போக்குவரத்தும் வாழ்க்கைச் செலவும் மிகவும் உச்ச நிலையில் உள்ளது ஆகவே இன்றைய சூழ்நிலையில் அரசு எரிபொருள் தடையை நீக்காது வேறு எந்த பொருள்கள் மீதான தடைகளையும் தளர்த்துவது ஒரு அர்த்தமற்றதாகவே இருக்கும். ஏனெனில் நமது பிரதேசத்தினது அனைத்து செயல்பாடுகளிலும் பிரதான தேவையாக இருக்கும் சக்தி முற்றாக தடுக்கப்பட்டுள்ளது மின்சாரம் இல்லை, எரிபொருள்கள் இல்லை. இந்த சூழ்நிலையில் அரசு வெளியுலகிற்கு ஓர் உண்மைக்கு புறம்பான நிலையில் தாம் பொருளாதாரத் தடையை தளர்த்தி உள்ளதாகவும் அபிவிருத்தி புனர்வாழ்வுப் பணிகளை தொடங்கவுள்ளதாகவும் ஓர் பிரசாரத்தை முடுக்கிவிட்டுள்ளது. இங்கு எரிபொருள் தடையை வைத்துக்கொண்டு எந்த அபிவிருத்திப்பணிகளோ அல்லது பொருள்கள் மீதான தடை நீக்கம் என்பதோ ஓர் அர்த்தமற்ற, நடைமுறைச் சாத்தியமற்ற விடயங்கள் என்பதை அனைவரும் புரிந்து கொள்வார்கள். அரசாங்கம் எமது மக்களின் உண்மை நிலையை அறிந்தும் எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதை விடுத்து ... தேசத்திற்கு கூடுதலான பிரசாரத்தை மேற்கொள்ளுகிறது. ஆகவே நாம் கருதவேண்டியுள்ளது.

கேள்வி: கண்காணிப்புக் குழுக்களுக்கு தலைமை வகிக்கும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் ஏற்கனவே இலங்கைக்கு வந்திருக்கின்றனர். இந்தக் குழு ஏன் இன்னமும் செயல்படத் தொடங்கவில்லை?

பதில்: கண்காணிப்புக் குழுக்கள் செயல்படாமைக்கு அரசே முழுப்பொறுப்பாகும். ஏனெனில தாக்குதல் நடவடிக்கை நிறுத்தம் சம்பந்தமாக நன்கு விரிவாக அரச பிரதிநிதிகளுடன் பேசப்பட்டது. அவ் ஒப்பந்த நகலில் வட பகுதிக்கு கூடுதலாக பொருந்தக் கூடியளவு அம்சங்கள் அதிகமாக இருந்தன. ஆனால் கிழக்கு மாகாணத்தின் நடைமுறைகளை இரு தரப்பினர் மத்தியிலும் உள்ள சிக்கல்களை களைந்து பேச்சளவில் இருதரப்பினரும் இணங்கியிருந்தோம். இராணுவத்தினருடைய நகர்வு பற்றியும் எமது போராளிகள் நகர்வு பற்றியும் மிகவும் விரிவாக பேசி இணக்கம் கண்டிருந்தோம். ஆனால் அரச தூதுக் குழு சென்ற ஒரு சில நாட்களில் ஒப்பந்த நகலில் குறிப்பிட்டதற்கு எதிர்மாறான சட்ட திட்டங்களை அரசு வெளியிட்டது.

அதாவது, மீனவர்களின் சட்டபூர்வமான மீன்பிடிக்கு ஒப்பந்த நகலின் பிரகாரம் அனுமதியளிக்கப்பட்டிருந்தும் மீனவர்களுக்கு முற்றிலும் சாதகமற்ற அறிவித்தல்களை அரசு அறிவித்தது.

அதாவது, குறிப்பிட்ட, வரையறுக்கப்பட்ட பிரதேசத்தில் மீன்பிடிக்கலாம் என்றும் இரவு நேர மீன்பிடித்தல் தடை செய்யப்பட்டிருப்பதாகவும் அறிவித்தது. யுத்த காலத்தில் எமது மக்கள் மிகுந்த உயிராபத்தின் மத்தியிலும் தமது தொழிலை செய்து வந்தார்கள். ஆனால் இந்த அமைதிக் காலத்தில் முழுமையாக இத்தொழிலையே நம்பி வாழ்க்கை நடத்தும் இம் மக்களுக்கு மிகவும் கொடுமையான கட்டுப்பாடுகளை அரசு போட்டுள்ளது

அடுத்ததாக கிழக்கு மாகாணத்தில் போராளிகள் ஆயுதங்களுடன் நடமாடக் கூடாது என அறிவித்துள்ளார்கள். இது ஒப்பந்தத்திற்கு எதிரான மிகமோசமான நடவடிக்கையாகும். நாம் எம்மைச் சந்தித்த கண்காணிப்புக் குழுக்களின் தலைவர்களான வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கு இவற்றை விரிவாக விளக்கினோம். அவர்களும் இதை ஏற்று இருதரப்பினரும் மீண்டும் பேசி, சில நடைமுறை மாற்றங்கள் விரிவுபடுத்தப்பட்ட ஓர் இணைப்பு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பின்பு தாம் தமது செயற்பாடுகளை ஆரம்பிக்கலாமெனத் தெரிவித்தார்கள். அன்றைய பேச்சுக்களில் கலந்து கொண்ட பிரிகேடியர் பீரிஸிடமும் இதைத் தெரிவித்திருந்தோம். ஆனால் அரசாங்கம் இதை மூடி மறைத்து கண்காணிப்பு குழுக்கள் செயற்படாமைக்கு விடுதலைப் புலிகளே காரணம் என பிரசாரம் செய்கின்றது.

அடுத்ததாக ஒப்பந்த நகலின் பிரகாரம் கண்காணிப்பு குழுக்கள் 6 நியமிக்கப்பட வேண்டும். ஆனால் அரசு அதனை 4 ஆகக் குறைத்து இக்கண்காணிப்புக் குழுக்கள் சிறப்பாக செயல்படாத இக்கட்டான ஒரு நிலையை ஏற்படுத்தியுள்ளது. இவற்றையும நாம் அரசிற்கு விளக்கமாக அறிவித்துள்ளோம் ஆகவே இவை அனைத்தையும் மூடிமறைத்து இந்தப் பிரச்சினைகளை தீர்க்காது கண்காணிப்புக் குழுக்களை அரசு இயங்க வைக்காமல் உள்ளது

கேள்வி: புலிகளும் சமாதானத்தை விரும்புகிறார்கள் என்றதோர் கருத்தை ஏற்படுத்துவதற்காக மட்டுமே நீங்கள் இந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருக்கிறீர்களா? அல்லது ஆக்கபூர்வமாகவே பேச்சு வார்த்தையில் நீங்கள் இறங்கியிருக்கிறீர்களா?

பதில்: நாங்கள் ஆக்கபூர்வமாகவே இந்த பேச்சு வார்த்தையில் இறங்கியிருக்கிறோம். ஏனெனில ஆரம்பத்திலிருந்தே எமது தேசியத் தலைவர் அரசின் சமாதான முயற்சிக்கு தனது நல்லெண்ண நடவடிக்கைகளை பலதடவை காட்டி வந்துள்ளார், தற்போதும் நாம் சமாதானப்பேச்சுக்களில் மக்களுடைய முழுமையான அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய தீர்வை அரசு முன்வைக்கவேண்டுமென்பதே எமது நிலைப்பாடும் எதிர்பார்ப்பும் ஆகும்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

தேக்கு அலுமாரிகள், டிரெசிங் ரேபிள், சாப்பாட்டு மேசை, லாச்சி மேசை, குசன் செற்றி, சோக்கேஸ், கட்டில், கடை சோக்கேஸ் [6X8], விறாக்கை [9X7] மற்றும் வீட்டுத் தளபாடங்கள். குறிஞ்சி மெடிக்கலுக்கு அருகில், பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி. [35314]

இனிக்கோழிகளும், மணித்தாராக்களும் விற்பனைக்கு உண்டு. இ. தருமலிங்கம், இல. 1/1, முதலாம் ஒழுங்கை, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். [35318]

## தேவை

ஆங்கில, தமிழ், தட்டச்சுத் தெரிந்த A/L படித்த இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம். நற்சான்றுப் பத்திரத்துடன் நேரில் வரவும். கு வி. அச்சகம், 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (8247)

## SPOKEN ENGLISH

வரி ... வகுப்புகள் ... Spoken English with Grammar கற்பிக்கப்படுகிறது. V N. Kandasamy. A I B. Part I London Inter (London Dip-in-English இல 87, திருநெல்வேலி றோட், (ரயில் கடவைக்குச் சமீபமாக), கொக்குவில் [8246]

## வீடியோ ... விநியோகம்

Christombu Golde Comet சிலப்பு பொ... டிக்கெட்டுக்கள் பதிவுசெய்து 1-3 95 புதன்கிழமை பெற்றுக்கொள்ளலாம். முன்னர் பதிவுசெய்தவர்கள் இத்திகதியில் பெற்றுக்கொள்ளவும் நல்லூர் வீடியோ சென்ரர், இல 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர் [35106]

## பாலர் ஆசிரியராக

விரைவில் பயிற்சி ஆரம்பம்: க பொ. த. (சா/த) கடைசித் தகைமை சனி, ஞாயிறு சமூகம் தர வசதியற்றோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (35295)

## ரி. வி. டெக் திருத்துநல்

சகல றேடியோக்களையும், ரி வி. டெக், எல்லாவித பணிக்கூடுகளையும் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள புல்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி [ஆரியகுளம் சந்தி], வானவில் அருகில் யாழ்ப்பாணம், கிளை கண்டி வீதி, சாவகச்சேரி. [சி-362]

## பெரிய வெங்காயம் விலை குறைப்பு

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் பெரிய வெங்காயத்தின் விலையை பேலும் ஒரு கிலோவுக்கு ஐந்து ரூபாவால் குறைத்துள்ளது.

இதன்படி, பெரிய வெங்காயத்தின் புதிய மொத்த விற்பனவு விலை ஒரு கிலோ 18 ரூபா என்றும், சில்லறை விலை 22 ரூபா என்றும் தெரிவிக்கப்படுகிறது. (எ)

---

# நொதேண் கல்வி நிலையம்

கண்டிக்குளி.

## O\L - 1995

தமிழ்

ஆசிரியர்: திரு. திருஞானம்

**விசேட புதிய பிரிவுகள்**

ஆரம்பம்: **28-02-1995**

மாலை 5-00 மணி

பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்பவர்களுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்படும்.

(35316)

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 15 | 05 |
| 04 | 03 |
| 1918 | 1994 |

## அமரர் சினப்பு சபாபதி

(கூத்தஞ்சிமா, அளவெட்டி வடக்கு)

திதி: 22 — 02 — 1995

எங்கள் குடும்ப நலனுக்காகவே ஒளிவீசி உருகிவிட்ட மெழுகுவர்த்தி நீங்கள். பண்பின் சிகரமாய்! பாசத்தின் உறைவிடமாய்! எல்லோர்க்கும் இனியவராய்! கண்ணை இமை காப்பது போல எம்மைக் காத்து வந்தவர். எங்கள் உயர்வு கண்டு இனிதுவக்க மறந்து இடையில் அகன்றசென்றனை. ஆண்டொன்று மறைந்தாலும். உங்கள் நினைவால் அலை பாய்கின்றன எம் உளளங்கள்.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

தேவாலய ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (8248)

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில்: | மனங்களில்: |
|---|---|
| 01 | 04 |
| 08 | 03 |
| 1969 | 1994 |

## செல்வி மயில்வாகனம் சந்திரகலா

(கௌரி)

(புளியங்கூடல் ஊர்காவற்துறை)

திதி: 22 — 2 — 1995

எங்கள் உயிர் உள்ள வரைக்கும் ஆறாது உன் நினைவு.
உனது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உன் பிரிவால் துயருறும்;
குடும்பத்தினர்.

சே. கே. எஸ் வீதி,
சேர்ச்சடி,
கொக்குவில் கிழக்கு. (35309)

---

யாழ். லயன்ஸ் கழக
ஆதரவுடன்
யாழ்ப்பாணம்
**இந்துக்கல்லூரி**
**சதுரங்கக் கழகம்**
நடத்தும்
பாடசாலைகளுக்கிடையிலான

# வருடாந்த சதுரங்க (CHESS) சுற்றுப்போட்டி - 1995

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் 6 வீரர்களையும், 1 பதில் வீரரையும் கொண்ட அணிக்கான விண்ணப்பத்தினை தங்களின் பாடசாலை அதிபருக்கூடாக, எமது கழகத்திடம் நேரடியாக — **28 - 02 - 1995** இற்கு முன்னதாக — சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு: மேலதிக விவரங்களை நேரில் அறிந்துகொள்ளலாம்.

— அதிபர்.

சதுரங்கக் கழகம்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி. (சி/595)

---

# தலைவர் பெயரில் திருத்தம்

இளங்கலைஞர் மன்ற 1995 இசைவிழா தொடர்பில் 19 - 02 - 95 நாளிதழ்களில் வெளியான நிகழ்ச்சி நிரலில் வலிகாமம் ப. தெ. வ. அ கூ. சங்க கொத்தணித் தலைவர் திரு. சி. கந்தசாமி எனப் பிரசுரிக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போதைய தலைவராக திரு. நா. கணேசன் என்பவரே பதவியிலுள்ளார் என்பதனை சம்பந்தப்பட்டவர்களுக்கு அறியத்தருகின்றேன்.

**பொதுமுகாமையாளர்**
வடமாகாண ப. தெ. வ. அ. கூ. ச. சமாசம்
499, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(சி/600)

---

# அலுவலக உபகரண தொழில் நுட்ப நிலையம்

# OFFICE EQUIPMENT TECHNICAL CENTER [O. E. T. C.]

★ தட்டச்சு இயந்திரங்கள்
★ றோணியோ இயந்திரங்கள்
★ காரியாலய உபகரணங்கள் சிறந்த முறையில் பழுது பார்த்து பெற்றுக் கொள்ளவும்.

மற்றும்

★ தட்டச்சு, றோணியோ இயந்திரங்கள் ஒப்பந்த அடிப்படையில் (Agreement) பராமரித்தல்
★ தமிழ். ஆங்கில தட்டச்சு வேலைகளுடன் றோணியோ பிரதிகளும் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

இல. 140 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(மனோகராச் சந்திக்கு அருகில்)
(8249)

---

# 5-ம் வருட நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 13 | 17 |
| 04 | 02 |
| 1933 | 1990 |

## அமரர் இ. வி. தளையசிங்கம்

(பட்டயக் கணக்காளர் - இங்கிலாந்து & வேல்ஸ் உரிமையாளர், E. V. தளையசிங்கம் & கம்பனி கொழும்பு- யாழ்ப்பாணம்)

திதி:22 — 02 — 1995

தண்ணளி நாதா அப்பா
தளையசிங்க கணக்காய்வாள
எண்ணமே எமதாய் நாளும்
எழில் பெறு தரும வாழ்வு
மண்ணிலே காட்டி நீயும்
வானுலகுற்று ஐந்தாண்டு
புண்ணியா பூர்த்தியாகும்
போதும் நாம் புலம்புகின்றோம்.

அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனை ஏத்துகின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**மனைவி, மக்கள்.**

வீமன்காமம்,
தெல்லிப்பளை. (35301)

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 12 | 22 |
| 10 | 02 |
| 1930 | 1994 |

திருமதி

## மேரி ராசமலர் நவரத்தினம்

"இன்றே நீ என்னோடு வான்வீட்டில் இருப்பாய் என்று நான் உறுதியாக உனக்குச் சொல்லுகிறேன்" (லூக்க: 23-43)

இவரின் ஆன்ம சாந்திக்காக மிருசுவில் புனித நீக்கொலஸ் தேவாலயத்தில் இன்று (22-02-1995) புதன்கிழமை காலை 6-30மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் பங்குபற்றி அவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக மன்றாடுமாறு கேட்டுக் கொள்கிறோம். அன்று பி. ப. 4மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஞாபகார்த்த உபசரணைகளில் சமுகமளிக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரன்**

இராஜஸ்தான்
மிருசுவில். (35273)

---

இலங்கை
# இளங்கலைஞர் மன்றத்தின்
# 15ஆவது இசை விழா

கலா மண்டபம் - சட்டநாதர் வீதி, நல்லூர்.

**12ஆம் நாள் 22 - 02 - 1995**
**புதன்கிழமை**

நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில்
ஆதரவில்

மாலை

**4-00 — 5-00 மங்கல இசை**
எம். கோவிந்தராஜன், எஸ். ஸ்ரீகரன் — நாதஸ்வரம்
எஸ். தட்சணாமூர்த்தி, ஆர். யசோதரன் — தவில்

**5-00 — 5-20 மிருதங்க இசை**
அ. முரளீதரன்
ம. ஸ்ரீவத்ஸாங்கன்

**5-20 — 5-40 பாட்டு**
சி. தர்சிலா, சி. நிக்சலா, சி காயத்திரி, ந. குமுதினி, இ. பிரகாசினி, கே. சுபகேசன், ச. நிஷாந் — பாட்டு
சுபத்திரா கணேசன் — வயலின்
டெனி யசோதரன் — மிருதங்கம்

**5 40 — 6-00 வயலினிசை**
ஜனனி நல்லையா, ஜனனி சஜமுகலிங்கம், பரமராணி நவரத்தினம், பிரியதர்சினி நாகராஜா, சைந்தவி ராதாகிருஷ்ணன் — வயலின்
எம். சுஜன் — மிருதங்கம்

**6-00 — 6-20 வீணை இசை**
கலைச்செல்வி சுந்தரலிங்கம்
அமிர்தா தியாகராசா
அனுஜா ர. ஜசிங்கம்
அருணா சிவகடாட்சம்
வி. தபோதநாயகம் — மிருதங்கம்

**6-20 — 7 05 பாட்டு**
சுகன்யா சிவானந்தம் — பாட்டு
ஆர். எஸ். கேசவமூர்த்தி — வயலின்
கே. கண்ணதாஸன் — மிருதங்கம்

**7-05 — 7-50 பாட்டு**
எம். ஸ்ரீரங்கநாதன் — பாட்டு
எஸ் வெங்கடேஸ்வரசர்மா — வயலின்
எஸ். பாலச்சந்திரசர்மா — மிருதங்கம்

**7-50 — 8-10 மங்கல விளக்கேற்றல்**
திரு. மு வேலாயுதபிள்ளை அவர்கள் (நிரு ரியூசன் சென்ரர்)
திரு சி. சிவரத்தினம் அவர்கள் (சிவரத்தினம் பேக்கறி, வல்வெட்டித்துறை)
திரு. சு. தனபாலசிங்கம் அவர்கள் (ஸ்ரீ அம்பாள், திருநெல்வேலி)
திரு. சி. சோமசுந்தரம் அவர்கள் (வர்த்தகர், வல்வெட்டித்துறை)

★ அருளுரை:
சிவஸ்ரீ ச.சிறீஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்கள் (கோண்டாவில் மேற்கு)

★ தலைவர்
திரு நா. க. சண்முகநாதபிள்ளை அவர்கள் (அதிபர், மத்திய கல்லூரி யாழ்ப்பாணம்)

★ பிரதம அதிதி
பேராசிரியர் ச. வை. பரமேஸ்வரன் அவர்கள் (பீடாதிபதி, மருத்துவபீடம்)

★ சிறப்பு விருந்தினர்
திரு.சொலமன் சூசைப்பிள்ளை சிறில் அவர்கள் (தலைவர், யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கம்)
கலாநிதி காரை.செ.சுந்தரம்பிள்ளை அவர்கள் (விரிவுரையாளர், கோப்பாய் ஆ. ப. க.)

**8-10 — 9-10 பாட்டு**
கே. இராமநாதன் — பாட்டு
உ. இராதாக்கிருஷ்ணன் — வயலின்
எஸ். துரைராஜா — மிருதங்கம்
சதா. வேல்மாறன் — கடம்

**9-10 — 10-15 பரதநாட்டியம்**
திருமறைக் கலாமன்ற பயிலக மாணவர்கள்
தயாரிப்பு: நளாயினி இராஜதுரை

வாழ்த்துவோர்:
**காகோ மரக்காலை**
105, சட்டநாதர் வீதி, நல்லூர்.
[சி-541]

---

# இதய அஞ்சலி

## செல்வன் எஸ். மணிவதனன்

கடந்த ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்தவரும்
எமது நண்பர்
எஸ். சற்குணத்தின்
சிரேஷ்ட புதல்வனுமாகிய

**செல்வன் எஸ். மணிவதனனுக்கு**

எமது இதய அஞ்சலிகளை செலுத்துவதுடன், அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**"ராஜன்ஸ்" இசைக்குழு**

242, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (35312)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 காலவர் வீதி
யாழ்ப்பாணம்

## ஆண்டியின் தோண்டியா?

விடுதலைப் புலிகளுடன் அரசு நடத்தும் சமாதானப் பேச்சுக்கள் எதிர்வரும் ஜூலை மாதத்திற்கு முன்பதாகப் பூர்த்தி அடைந்துவிடும் என்று அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

அரசமைப்பு மாற்றத்திற்கு முன்னர் யுத்தம் முடிவுக்கு வந்து விடும்; சமாதானம் உண்டாகிவிடும் என்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியிருக்கிறார்.

அமைச்சர்களின் வாய் பொன் வாயாகஇருந்து, அவர்கள் சொல்வது போலவே குறிப்பிட்ட கால எல்லைக்குள் போர் முடிந்து, தமிழர் பிரச்சினைக்கு உகந்த தீர்வு கிடைத்து, சமாதானம் உருவாகி விட்டால் எல்லோருக்குமே மகிழ்ச்சியும் குதூகலமும் பிறக்கும்.

மிகக் குறிப்பாக, தமது அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய தீர்வு ஒன்று கிடைத்து, போர் மறைந்து, அமைதியும், நிம்மதியும் உண்டாகினால் ஏனையோரை விட மெத்த மகிழ்ச்சி கொள்பவர்கள் வடக்கு - கிழக்கு வாழ் தமிழ், முஸ்லிம் மக்களாகவே இருப்பர்.

ஆனால் அமைச்சர்கள் இருவரும் நம்புவது போல அல்லது நம்பிக்கை வெளியிடுவது போல, இன்னும் நான்கு மாதங்களில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு, சமாதானம் என்பன கைக்குக் கிடைத்து விடுமா என்பது மிகப் பெரிய கேள்விக் குறியாகவே வளர்ந்து நிற்கிறது!

அதுவும் அரசாங்கம் இவ்வழியில் நத்தை வேகத்தில் நகரும் போது, நாற்பது வருடப் பிரச்சினைக்கு இன்னும் நான்கு மாதங்களில் தீர்வும் அதனூடான அமைதி சமாதானமும் கிடைக்கும் என்று நம்புவதற்கு எவருக்கும் மனம் இடந்தராது.

அரசியலில் மாற்றங்கள், திருப்பங்கள் ஆகியன ஒரு சில நாள் இடைவெளியிலேயே உருவாகுவது உண்டு. ஆனால் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைக் களைந்து அவர்களின் கஷ்டங்களைப் போக்குவதற்கு இயலாமல் கடந்த ஐந்து மாதங்களாக அரசு தடக்குப்பட்டு நிற்பதைப்பார்க்கும்போது, அமைச்சர்கள் கூறும் கால அட்டவணைக்குள் எல்லாம் இனிதே நடந்தேறும் என்று நினைக்கவும் முடியவில்லை!

அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் மட்டும் பேசி தீர்வுக்கு வரமுடியாதுள்ளது. இராணுவத்துடனும் பேச வேண்டியுள்ளது. இராணுவம் சம்மதித்தால் அல்லது அதனை ஏதோ ஒரு வகையில் திருப்திப்படுத்தினால் மட்டுமே தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைக் களையக்கூடிய சாத்தியம் உருவாகும் என்ற நிலையாகி விட்டது.

அது போலவே, விடுதலைப் புலிகளுடன் மட்டும் பேசி இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒன்றைக் கண்டுவிடும் சூழ்நிலை இல்லை. தெற்கின் இனவாத, தீவிரவாத சக்திகளுடன் பேசாவிடினும், அவற்றையும் திருப்தி செய்ய வேண்டிய தேவை அரசுக்கு உண்டு. உகந்த தீர்வு ஒன்றைக் காண்பதற்கு எதிராக அவை வைக்கக்கூடிய பொறிகளில் இருந்து தப்பித்துக் கொள்ளும் சாமர்த்தியமும் சந்திரிகாவுக்குத் தேவை.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வை அரசாங்கம் முன்வைக்குமா என்பதிலேயே எல்லாம் தங்கியுள்ளது. தமிழர்கள் தங்கள் தாயகத்தில் தன்னாட்சி உரிமையுடன் வாழவழி செய்யும் தீர்வு ஒன்றையே விரும்புகிறார்கள். அதற்கு வகைசெய்யும் புதிய அரசமைப்பு ஒன்றை, உருவாக்கும் விருப்பம் அரசுக்கு உண்டா என்ற கேள்விக்குரிய பதில் அரச அமைச்சர்களுக்கே இன்னும் தெரியாது!

நிலப்பரப்புடன் சம்பந்தப்படுத்தாமல் கூடுதல் அதிகாரபபரவலை மட்டுமே தீர்வாக்குவதற்கு அரசு முனைகிறது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தகைய ஒரு நிலையில் இன்னும் நான்கு மாதங்களில் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு, போர் முடிந்து, சமாதானம் கிடைக்குமென்று அமைச்சர்கள் கூறுவது நந்தவனத்து ஆண்டியின் தோண்டிக் கதையாகவே முடியுமா?

---

ஜனாதிபதி செயலணி தலைவர்

## அமைச்சர் ரட்ணசிறி விரைவில் யாழ். வருவார்

கொழும்பு, பெப். 22

புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு பற்றி விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புக்கு பொறுப்பான விசேட ஜனாதிபதி செயலணி குழுவின் தலைவரான அமைச்சர் ரட்ணசிறி விக்ரமநாயக்கா யாழ்ப்பாணம் செல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்து வரும் இரண்டு வாரங்களில் அவர் தமது யாழ். பயணத்தை மேற்கொள்ளும் சாத்தியமிருப்பதாக "சண்டே ரைம்ஸின்" அரசியல் செய்தியாளர் தகவல் வெளியிட்டிருக்கிறார்.

பெருந்தோட்டத் தொழிற்துறை முகாமையாளர்களின் கூட்டம் ஒன்றில் பேசிய அமைச்சர், —

"நான் யாழ் குடாநாட்டின் புனர்வாழ்வு, புனரமைப்புப்பணிகளில் அடுத்த இரு வாரங்களில் முழுமூச்சாக ஈடுபடப்போகின்றேன் அக்காலத்தில் என்னைச் சந்திக்க முடியாதிருக்கும்" என்று தெரிவித்திருந்தார்.

"நீங்கள் பொறுத்து இருந்து பாருங்கள் வடக்கில் சிவில் நிர்வாகத்தை நாம் மீண்டும் ஏற்படுத்துவோம்" — என்றும் நம்பிக்கையுடன் அமைச்சர் அங்கு தெரிவித்தார் — என "சண்டேரைம்ஸ்" தகவல் வெளியிட்டுள்ளது. (ஐ-எ)

## கூட்டுறவுச் சங்கங்களுக்கு முற்பணம்

கொழும்பு, பெப். 22

பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் நாம் விநியோகிக்கும் உணவு முத்திரைக்கான பணத்தின் 75 வீதத்தினை முற்பணமாக பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்குரிய கொடுப்பனவுகளைச் செய்யும்படி பிரதேச செயலாளர்களை, வறுமை நிவாரணத் திணைக்களம் பணித்துள்ளது. மேலதிக உணவு முத்திரைத் திட்டத்துக்கான நிதியிலிருந்து இதற்கான நிதி வழங்கப்படும்.

இந்த முற்பணம் மாதாந்தம் அல்லது வருட பிற்பகுதியில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-14)

## ஜனாதிபதி முறையை ஆதரிக்கும் ஜே. ஆரின் மனோபாவம் மாறுகிறது

### ஐ. தே. க வட்டாரங்களில் கவலை

கொழும்பு, பெப். 22

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஆதரித்து ஐ. தே கட்சியினர் மத்தியில் தொடர் கருத்தரங்குகளை நடத்துவதற்கு முன்னர் திட்டமிட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா தற்போது மனதை மாற்றிக் கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இக் கருத்தரங்குகள் நேரத்தை விரயமாக்கும் செயல் என்று அவர் உணருவதாக "சண்டே ரைம்ஸ்" தகவல் வெளியிட்டிருக்கிறது.

ஐ. தே. க. தேசியப்பட்டியலில் எம்.பி. டாக்டர் ராஜிதா சேனரத்னாவைச் சந்தித்த ஜெயவர்த்தனா, — "உங்களைப் போன்றவர்களுடன் பேசுவது நன்றாக இருக்கும், அரசமைப்பு பற்றி விரிவுரை நிகழ்த்துவதை விட" — என்று சொன்னாராம்.

ஜெயவர்த்தனாவின் இந்தத் திடீர் மனமாற்றம் ஐ. தே. க. வட்டாரங்களில் கவலையை ஏற்படுத்தியுள்ளதாக 'சண்டே ரைம்ஸ்' தகவல் வெளியிட்டுள்ளது.

அரசமைப்பு பற்றி விரிவுரை நிகழ்த்த ஜெயவர்த்தனாவை அழைத்து விட்டு பின்னர் அவரை ஓரம் கட்டும் முயற்சியில் ஐ.தே க. தலைமைப்பீடம் ஈடுபட்டுள்ளதா என்று ஐ தே. க. பிரமுகர்கள் சிலர் தெரிவித்துள்ளனராம். [ஐ-எ]

---

கடற்படையின் வலிமையை அதிகரிக்க முயற்சி

## நீர்மூழ்கி கப்பல்களை பார்வையிட கடற்படை குழு பங்களாதேஷ் விஜயம்

கொழும்பு, பெப். 22

சீனாவில் தயாரிக்கப்பட்ட நீர் மூழ்கிக் கப்பல்களின் செயற்பாடுகள் பற்றி நேரில் கண்டறிய ஸ்ரீலங்கா கடற்படைத் தூதுக்குழு ஒன்று அண்மையில் பங்களாதேஷ் சென்றிருந்தது.

கடற்புலிகளுக்கு எதிராக கடற்படையின் வலிமையை அதிகரிக்கும் ஒரு முயற்சியாக இப்பயணம் மேற்கொள்ளப்பட்டதாக 'சண்டே லீடர்' தகவல் வெளியிட்டுள்ளது.

ஆறு பேர் கொண்ட அக் குழுவுக்கு கொமடோர் எல். மென்டிஸ் தலைமை வகித்தார். கப்டன்களான பிரஸன்னா ராஜரத்தனா, இ. எம். கே. பெர்னாண்டோ, லெப். கொமாண்டர்களான அபயக்கூன் பண்டார, பெரேரா ஏனைய உறுப்பினர்கள் ஆவர்.

ஒரு வார கால பயணத்தை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பிய அந்தக் குழு கடற்படைத் தளபதி மொஹான் சமரசேகராவிடம், பயண விவரங்களைத் தெரிவித்தது. விரைவில் இக்குழு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

## "ஹோவர்கிராப்ட்" படகுகளை போட்டி விலையில் வாங்க முயற்சி!

### இராணுவ அதிகாரிகள் குழு லண்டனுக்கு

கொழும்பு, பெப். 22

இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த சில சிரேஷ்ட அதிகாரிகள் அண்மையில் லண்டன் சென்று "ஹோவர்கிராப்ட்" படகுகளின் செயல் பாடுகளை நேரில் ஆராய்ந்தனர்.

"சண்டே லீடர்" பத்திரிகை இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

இந்த 'ஹோவர் கிராப்ட்' படகுகள் முன்னர்பிரிட்டனுக்கும், பிரான்ஸுக்கும் இடையேயான கடற் பயணத்துக்கு பயன்படுத்தப்பட்டு வந்தன.

தற்போது பிரிட்டனுக்கும், பிரான்ஸுக்கும் இடையேயான பயணத்துக்கு சுரங்கப் பாதை திறக்கப்பட்டதை அடுத்து இந்தப் படகுகள் விற்பனைக்கு வந்துள்ளன.

போட்டி விலையில் "ஹோவர்கிராப்ட்" படகுகளை வாங்கும் சாத்தியம் பிரகாசமாகஇருப்பதாக பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடற்படைப்பலத்தை பெருக்குவதில் கடற்படையுடன் இராணுவமும் அக்கறை காட்டிவருவதாக "சண்டே லீடர்" தெரிவிக்கின்றது. (ஐ-எ)

## உதைபந்தாட்டப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ். பிரதேச செயலகப் பிரிவினால் நடத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் இன்று புதன் கிழமை பிற்பகல் குருநகர் பாடு மீன்விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:

★ 2-30 மணி நாவாந்துறை சென் மேரீஸ் வி. க. அணி எதிர் யாழ். பாரதி வி. க. அணி.

★ 3 30 மணி திருவள்ளுவர் வி. க. அணி எதிர் நாவாந்துறை சென் நிக்கலஸ் வி. க. அணி. [எ-4-14]

## இன்னும் உறுதியான வரையறைகள் மோதல் தவிர்ப்புக்கு வேண்டும்

### வெளிநாட்டு அவதானிகள் கருத்து

கொழும்பு, பெப். 22

அரச பிரதிநிதிகளுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெறக்கூடிய பேச்சுவார்த்தைகளில் மோதல் தவிர்ப்பு தொடர்பாக மேலும் உறுதியான வரையறைகள் வகுக்கப்பட்டால் மட்டுமே கண்காணிப்பு பணியை ஒழுங்காகச் செய்யலாம் என்ற நிலைப்பாட்டை கண்காணிப்பு குழுக்களின் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கொண்டிருப்பதாக நம்பகமாகத் தெரியவருகிறது.

இவ்வாறு கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இருதரப்பினருமே நிரந்தரமான போர் நிறுத்தத்தை நோக்கி முனைப்பைக் காட்டும் விதத்தில் செயற்பட்டால்தான் கண்காணிப்புக் குழுவினரின் கடமைகள் இலகுவாக இருக்கும்—என்று அவர்கள் கருதுகின்றனர்.

தற்போது கடைப்பிடிக்கப்படும் மோதல் தவிர்ப்பு ஏற்பாட்டைப் பொறுத்தவரை மீறல்களை இனங்கண்டு தீர்வைக் காண்பதற்குரிய வகையில் போதுமான விதிமுறைகள் இல்லை என்பதே வெளிநாட்டு அவதானிகளின் கருத்தாக இருக்கிறது — இவ்வாறு அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. [ஐ]

## மொரார்ஜிக்கு வயது நூறு

சென்னை, பெப். 22

அரசியலிருந்து ஓய்வு பெற்று தமது வயோதிபக் காலத்தைக் கழித்து வரும் இந்தியாவின் முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாயின் நூற்றாண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாட இந்திய மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது.

எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் ஒரு வருட காலத்துக்கு மொரார்ஜிநூற்றாண்டு விழா நிகழ்வுகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது (உ)

## வலுவான அதிகாரப் பரவலுக்கு இடதுசாரிக் கட்சிகள் ஆதரவு

இனப் பிரச்சினைக்குத் தீர்வாக வலுவான அதிகாரப் பரவலாக்கத்துக்கு ஆதரவு வழங்கத் தாங்கள் முயற்சிப்பதாக நாடாளுமன்ற இடதுசாரிக் கட்சிகள் உறுதி தெரிவித்துள்ளன

நாடாளுமன்றத்தில் உள்ள இடதுசாரி அரசியல் கட்சிகளுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடையே பொதுவான இணக்கப்பாடு ஏற்படுத்துவது குறித்து கடந்த வாரம் நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது, இவ்வாறு தெரிவிக்கப்பட்டதாக நடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி நீலன் திருச்செல்வம் தெரிவித்துள்ளார்.

லங்கா சமசமாஜக்கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கை மக்கள் கட்சி ஆகியவற்றின் தலைவர்கள் இச்சந்திப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுடன் இனப்பிரச்சினைத் தீர்வு மற்றும் அரசியல் விடயங்கள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அதிகாரப் பரவலாக்கம் எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரதிநிதிகள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தார்கள்.

வலுவான அதிகாரப் பரவலாக்கத்துக்காக பொதுமக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் கட்சிகளின் ஆதரவைத் திரட்ட உதவுவதாக இடதுசாரித் தலைவர்கள் இக் கலந்துரையாடலில் தெரிவித்தனர்

தொகுதி ரீதியிலும், தேசிய ரீதியிலும் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் ஜேர்மன் பாணியிலான புதிய தேர்தல் முறை சம்பந்தமாக அடுத்த கூட்டத்தில் பேசுவதற்கு இரு தரப்பினரும் அங்கு இணக்கம் தெரிவித்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கடற்றொழில் அமைச்சர் இந்திக குணவர்தனா, பொதுச் செயலாளர் ராஜா கொலுரே, நாடாளுமன்ற உறுப்பினர் கே பி. சில்வா ஆகியோரும் லங்கா சமசமாஜக் கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பட்டி வீரக்கோனும் கலந்து கொண்டனர். (க)

## திட்டங்கள் ஏற்பு

வலிகாமம் தெற்கு. பெப். 22

1995 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் செயற்படுத்தப்பட உள்ள திட்டங்கள் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாக ஏற்கப்பட்டன (எ-152)

றோஹண விஜேவீர கொலை:

## ஆணைக்குழு நியமிக்கக் கோரி சுவரொட்டிகள்

ஜே. வி. பி. தலைவர் றோஹண விஜேவீர படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பற்றி விசாரிக்க விசேட ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை தாமதமின்றி நியமிக்கும்படி கோரி தென்பகுதி எங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

றோஹண விஜேவீரவுடன் ஜே வி பியின் பொதுச் செயலாளர் உபதிஸ்ஸ கமநாயக்கா, மற்றும் அதன் அரசியல் குழு உறுப்பினர்களில் பெருமபாலோர் தென்பகுதி வன்செயல்களின் போது படை[illegible] கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது

இக் கொலைகளுக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ பொறுப்பானவர்களைக் கண்டு பிடித்து தண்டிக்க அரசு விசேட ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்று ஜே. வி.பி. இயக்கம் கோரியுள்ளது

கைதான தமது தலைவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாமல் படையினர் கொன்றதாக ஜே வி பி. குற்றஞ்சாட்டியுள்ளது

எனினும் அவர்கள் காவலில் இருந்து தப்பியோட முயற்சிக்கையிலேயே சுட்டுக்கொல்[illegible] [illegible] தரப்பில் கூறப்படுகிறது. [எ]

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம். பெப் 22

கலாநிதி ஏ. ஜே. வி சந்திரகாந்தனின் Catholic Revival in Post Colonial Srilanka (காலனித்துவத்துக்குப் பிந்திய இலங்கையில் கத்தோலிக்க மறுமலர்ச்சி) நூல் வெளியீடு இன்று புதன் கிழமை மாலை 3 15 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்

யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை பிரதம விருந்தினராக கலந்துகொண்டு நூலை வெளியிட்டு வைப்பார் நூல் அறிமுகவுரையை அருட்கலாநிதி சி. யோ இம்மானுவேலும் ஆய்வுரைகளை பேராசிரியர் நா பாலகிருஷ்ணன், பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோரும் வழங்குவார்கள். (எ14)

## வெடிகுண்டுகள் குறித்து எனக்கு அச்சமில்லை!

### சந்திரானந்த டி சில்வா கூறுகிறார்

கொழும்பு, பெப். 22

வெடிகுண்டுகளுக்கு நான் அஞ்சமாட்டேன் —

பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளர் சந்திரானந்த டீசில்வா முன்கண்டவாறு தெரிவித்தார்.

"தேர்தல் ஆணையாளராக நான் பதவி வகித்த போது, 1988 தேர்தல் காலத்தில் எனது அலுவலகத்துக்கு குண்டு வீசினார்கள்" — என்று ஒன்பது தேசியத் தேர்தல்களை நடத்திய அவர் கூறினார் (ஐ-எ)

தமிழ் நாட்டிலிருந்து

## அடுத்த வாரம் முதல் அகதிகள் தாயகம் வருவர்

தமிழகத்தில் தங்கியுள்ள ஈழத்தமிழ் அகதிகளை திருப்பியனுப்பும் நடவடிக்கை எதிர்வரும் திங்கட்கிழமையன்று மீண்டும் ஆரம்பமாகவிருக்கின்றது.

எதிர்வரும் 27 ஆம் திகதிக்கும் மார்ச் 15 ஆம் திகதிக்கும் இடையில் சுமார் 4 ஆயிரத்துக்கும் அதிகமான ஈழத் தமிழர்கள் திருப்பியனுப்பி வைக்கப்படுவர் என இராமநாதபுரம் ஆட்சித் தலைவர் எல். கிருஷ்ணன் தெரிவித்தார்.

இவர்கள் பல பிரிவுகளாக தலைமன்னாருக்கு கப்பலில் அனுப்பிவைக்கப்படுவர் என்றும்—

கப்பலில் அனுப்பப்படவிருக்கும்— முதல் தொகுதியைச் சேர்ந்த— சுமார் ஐநூறு அகதிகள் தற்போது மண்டபம் அகதி முகாமில் தங்கவைக்கப் பட்டிருப்பதாகவும் அவர் சொன்னார். (உ)

## 'ஜெ'க்கு எதிராக வழக்கு தொடர அனுமதிப்பதா?

### மார்ச்சில் ஆளுநர் முடிவு செய்வார்

சென்னை, பெப். 22

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு எதிராகத்தெரிவிக்கப்பட்டிருக்கும் ஊழல், மோசடி லஞ்சக் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு அனுமதி அளிப்பதா என்பது குறித்து தமிழக ஆளுநர் சென்னாரெட்டி எதிர்வரும் மே 31ஆம் திகதிக்கு முன்னர் முடிவு செய்வார்.

நேற்று முன்தினம் புதுடில்லி உச்ச நீதிமன்றத்தில் ஆளுநரின் சட்டத்தரணி இத்தகவலைத் தெரிவித்தார்.

தமிழக முதல்வருக்கு எதிராக ஊழல், மோசடி விடயங்கள் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்ய அனுமதி வழங்கும்படி கோரி டாக்டர் சுப்பிரமணிய சுவாமி உட்பட இருவர் சமர்ப்பித்த விண்ணப்பங்களுக்கு ஆளுநர் பதிலளிக்காததை ஆட்சேபித்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன—

இந்த வழக்குகளைத் தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஆட்சேபித்து புதுடில்லி உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கவையாகும்.

இந்த மேன்முறையீட்டு வழக்கு நேற்று முன்தினம் புதுடில்லியில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே—

ஜெயலலிதாவுக்கு எதிராக விசாரணை நடத்தக் கோரும் விண்ணப்பங்கள் குறித்து எதிர்வரும் மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் ஆளுநர் முடிவு செய்ய இருப்பதாக ஆளுநரின் சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதனையடுத்து மேன் முறையீட்டு வழக்கு விசாரணையை கோடை விடுமுறைக்கு [illegible]ன்னர் நடத்துவது என நீதிமன்றம் முடிவு செய்தது

## திருமலைத்தமிழ் மீனவரின் காணிகள் சுவீகரிப்பு

### நிறுத்துமாறு அமைச்சருக்கு மகஜர்

திருகோணமலை நகரில் திருக்கடலூர்ப் பகுதியில் கடந்த 40 வருடங்களுக்கும் மேலாக வசித்து வரும் தமிழ் மீனவக் குடும்பங்களின் வீடுகள் அமைந்துள்ள காணிகளை சுவீகரிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக முறையிடப்பட்டுள்ளது

இந்த நடவடிக்கையை உடனடியாக நிறுத்தும்படி திருக்கடலூர் புனர்வாழ்வுக் கழகம் கடற்றொழில், நீரியல் வளத்துறை அமைச்சர் இந்திகா குணவர்த்தனாவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது

மகஜரின் பிரதிகள் ஜனாதிபதி மற்றும் திருகோணமலை பிரதேசச் செயலர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. (க-5)

## வட- கிழக்கு அபி. நிதிபற்றி பட்ஜெட்டில் எதுவுமில்லை

### நாடாளுமன்றில் எம். பி. உரை

யாழ்ப்பாணம்.பெப்,22

வடக்கு - கிழக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு 3,900 கோடி ரூபா வழங்குவதாக ஜனாதிபதி உறுதி அளித்திருந்தார் ஆனால் வரவு - செலவுத் திட்டத்தில் அது தொடர்பாக எதுவும் குறிப்பிடப்படவில்லை.

யாழ்ப்பாண மாவட்ட எம். பி ஒருவர் கடந்த 16 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய வரவு-செலவுத் திட்டம் மீதான உரையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:

சகல சமூகங்களுக்கும் உரிய உரிமைகள் அரசசேவைகளில் வழங்க வேண்டும் 30 அமைச்சுகளின் செயலாளர்களில் மூவரே தமிழர்கள். மேலதிக செயலாளராகவும் ஒருவரே உள்ளார்.

நீதி அமைச்சர் இந்த நியமனங்களில்இன விகிதாசாரம் கடைப் பிடிக்கப்படும் என்று உறுதி அளித்திருந்தார். ஆனால் இதுவரை அது இடம் பெறவில்லை— என்றார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## இளையகுட்டி சதாசிவம்

மண்டைதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முழங்காவில், நாகபடுவானை வசிப்பிடமாகவும் கொண்ட இளையகுட்டி சதாசிவம் 1995 - 02 - 20 இல் காலமாகிவிட்டார்.

இவர் இளையகுட்டி — மாரிமுத்துவின் அன்பு மகனும், காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும், செல்லம்மா, தில்லைவனம், கனகம்மா, நல்லையா, காலஞ்சென்றவர்களான நன்னியாச்சி, சின்னம்மா, தில்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், தவபலநாதன், காலஞ்சென்ற சற்குணசிங்கம் மற்றும் சரஸ்வதியம்மா, தவானந்தராசா, ஸ்ரீகாந்தராசா (இத்தாலி), காலஞ்சென்ற வசந்தகுமாரி மற்றும் செந்தில்மணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், தில்லைநாயகியின் சிறிய தந்தையும், காலஞ்சென்ற யோகவதி மற்றும் விஜயலெட்சுமி, வைரவநாதன், இராசேஸ்வரி, புனிதவதி (இந்தியா), சுந்தரமூர்த்தி (ஜேர்மனி), காந்தரூபி (இந்தியா), தருமரெத்தினம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் செவ்வாய்க்கிழமை 21 - 2 - 95) பி.ப. 4 மணிக்கு நாகபடுவானில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
கி. வைரவநாதன்

958 / 22, தலையாழி,
யாழ்ப்பாணம் (35325)

## M. A சிவலோகநாதன் J. P

திருநெல்வேலியில் வசித்தவரும், தற்பொழுது கொழும்பில் வாழ்ந்தவருமாகிய M A சிவலோகநாதன் அவர்கள் (இளைப்பாறிய Training Officer C. T. B கோண்டாவில்) 17-2-95 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் கந்தர்மடம், பழம் றோட்டைச் சேர்ந்த காலஞ்சென்ற அப்பாக்குட்டி தங்கம்மா தம்பதிகளின் கனிஷ்டபுத்திரனும், இராசமணியின் அன்புக் கணவரும், U K வாசிகளான திருமதி யோகன் சாந்தி, ராகவன், திருமதி ஜனா பாஸ்கரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மதுரா, சிந்தியா, பிந்தியா, துர்க்கா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களாகிய சங்கரத்தினம், ஆனந்தர், சவுந்தரம், நாகலிங்கம், தெய்வானைப்பிள்ளை, பொன்னையா, மற்றும் மாசிலாமணி, திருமதிகள் சிவபாக்கியம் சோமசுந்தரம், தேவசிகாமணி, கனகரத்தினம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் 20-2-95 இல் கொழும்பில் நடைபெற்றன என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

தகவல்
M. A. மாசிலாமணி
(சகோதரன்)

இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு. (35321)

## சின்னத்துரை சிவசுப்பிரமணியம்
(பாலா)

[உரும்பிராய் சிதம்பரசுப்பிரமணிய சுவாமி கோயில் பரிபாலனசபை உறுப்பினர்]

உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்துரை இராசம்மாவின் இளைய மகனும், கோண்டாவில் கிழக்கு முத்துக்குமாரு சிவஞானம்மா [கனடா] ஆகியோரின் மருமகனுமான சிவசுப்பிரமணியம் நேற்று (21 - 2 - 95) செவ்வாய் காலை காலமானார்.

இவர் தேவமனோகரியின் அன்புக் கணவரும், ராகவன் (கனடா), மதிசுதன் (கனடா), மாதவன் (கனடா), கேசவன் (ஜேர்மனி), ரமேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆனந்தி (கனடா), மகாராணி (கனடா) ஆகியோரின் மாமனும், விசுவலிங்கம், ராஜேஸ்வரி, அன்னலட்சுமி சத்தியதேவி (மலேசியா) காலஞ்சென்ற தங்கரத்தினம், மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், குட்டித்தம்பி, நடராசா, விமலராணி, செல்வசரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;
தேவமனோகரி
(மனைவி)

உரும்பிராய் தெற்கு [35319]

## பத்தினாதர் கொர்ணலியூஸ்

[பிரபல கட்டட நிர்மாணியும், ஒப்பந்தக்காரரும்]

பத்தினாதர் கொர்ணலியூஸ் 21-2-95 அன்று இறைவனடி சேர்ந்தார்.

இவர் பத்தினாதர் - காலஞ்சென்ற செபமாலை மரியை ஆகியோரின் அன்பு மகனும், காணிக்கை - மரியறோஸின் அன்புக்கணவரும், வினிதா (France), றெஜினோல்ட் (Norway), விஜி [Swiss], றேமினி, கரலசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மகிமைநாதன், தங்கம், பெரியபாவை, சின்னப்பாவை, அன்னரெத்தினம் [இந்தியா], சின்னப்பிள்ளை, யேசுதாசன் [இந்தியா], றோசெற்றா [France], ஆகியோரின் அன்புச் சகோதரனும், G. P போமினஸ் [ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர், சிறைச்சாலை திணைக்களம்], காலஞ்சென்ற றீற்றம்மா, அல்போன்ஸ், அமிர்தம், றேமன் [இந்தியா], ராஜன், குணா [இத்தாலி], யஸ்ரின், றேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ராஜசேகரன் [France] சூட்டிரீபா [Norway], அன்ரன [Swiss] ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று [22 2 95] பி.ப 3.45 மணிக்கு ஆரம்பமாகி 4 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியின்பின், பூதவுடல் புனித கொஞ்சேஞ்மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுகொள்ளவும்.

தகவல்;
கொ. காணிக்கை மரியறோஸ்
[மனைவி]

29 A, கொண்டடி றோட்,
குருநகர் யாழ்ப்பாணம். [35322]

இப்பத்திரிகை நியு உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 22- 02 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

14 தமிழ் இளைஞர் காணாமற்போனமை

# முகாமிலிருந்த 179 சிப்பாய்களையும் நீதிமன்றில் ஆஜர் செய்ய உத்தரவு

கொழும்பு, பெப். 22

ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவில் உள்ள வந்தாறுமூலை கிராமத்தில் கடந்த வருடம் மார்ச் மாதம் 17 ஆம் திகதி வயலில் அறுவடையில் ஈடுபட்டிருந்த சமயம் இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்ட பின்னர் காணாமல் போன 14 தமிழ் இளைஞர்கள் தொடர்பாக —

சம்பவம் நடைபெற்ற தினத்தில் கித்துள் இராணுவ முகாமில் கடமையிலிருந்த 179 இராணுவச் சிப்பாய்களையும் அடையாள அணிவகுப்புக்காக எதிர்வரும் 29ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு மட்டக்களப்பு மாவட்ட பாதுகாப்பு இணைப்பதிகாரிக்கு மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற மேலதிக நீதிபதி திருமதி சந்திரமணி சிவபாதம் உத்தரவிட்டிருக்கிறார்.

14 தமிழர்களும் கொலை செய்யப்பட்டதாகத் தெரிவித்து செங்கலடி வேப்பவெட்டுவான் கிராமத்தைச் சேர்ந்த தம்பிராசா சேனாதிராசா என்பவர் மட்டக்களப்பு பொலீஸில் இச்சம்பவம் குறித்து முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து விசாரணை மேற்கொண்ட பொலீஸார் இது தொடர்பாக வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தனர்.

அந்த வழக்குத் தொடர்பாகவே மேற்படி உத்தரவை நீதிபதி விடுத்தார்.

சம்பவதினம் ஹெலிக்கொப்டர் தாழப்பறந்து வட்டமிட, அப்பகுதியைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்திய படையினர், மேற்படி 14 தமிழ் இளைஞர்களையும் கூட்டிச் சென்றனர் என்றும் —

சற்று நேரத்தில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## பாதை திறப்பு--

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தாவது:-

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளராக சந்திரானந்த டி சில்வா நியமிக்கப்பட்டது நான்காவது சுற்று சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வழி சமைத்துள்ளதாக தகவலறிந்த அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகளுடன் அரசு நடத்திவரும் சமாதானப் பேச்சுக்கு ஜெனரல் வனசிங்க பாதுகாப்பு அமைச்சுச் செயலாளராக இருந்தது பெரும் முட்டுக்கட்டையாக இருந்தது.

சிவிலியன்களுக்கு பாதுகாப்பான போக்குவரத்துப் பாதை ஒன்றைத் திறப்பது தொடர்பாக இணக்கம் காணுவது தாமதப்பட்டது இதனாலேயே என்று — இவ் வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

போக்குவரத்துப் பாதை திறப்பு குறித்து அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு ஒன்று ஏற்பட்டுள்ளதாகவும் இவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

நான்காவது கட்டப் பேச்சுவார்த்தையை நடத்த அரசுத்தூதுக்குழுவை யாழ்ப்பாணம் அனுப்புவதற்கு விடுதலைப் புலிகளின் அனுமதியை அரசு எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பூநகரி, ஆனையிறவு பாதைகளை திறப்பதற்கு இரு தரப்பிலும் இணங்கக்கூடிய [illegible]ரணங்களை வெளியிடமறுத்த அவ்வட்டாரங்கள் —

இப்பாதைகளை திறக்கும் ஒழுங்குகள் புனரமைப்புக்குத் தேவையான கனரக உபகரணங்களை எடுத்துச் செல்ல உதவும் என்று தெரிவித்தன.

கனரக உபகரணங்கள் ஆனையிறவு ஊடாக எடுத்துச்செல்ல முடியும். பூநகரி பாதையூடாக பயணிகள் செல்ல முடியும்.

ஜெனரல் வனசிங்க பாதுகாப்பு அமைச்சை விட்டு வெளியேறியது, ஸ்தம்பித நிலையடைந்த சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வதற்கு நிச்சயம் உதவியுள்ளது என்று யாழ்நிலையை அவதானிப்பவர்கள் தெரிவித்தனர்.

— இவ்வாறு அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது [உ-எ]

## முற்போக்கு...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

கூட்டத்தில் உரையாற்றும் போதே இந்த எச்சரிக்கையை அவர் விடுத்தார்.

"கடந்த தேர்தலின்போது புதை குழிகளைத் தோண்டி எலும்புக் கூடுகளை வெளியே எடுப்பதன் மூலம் மக்கள் அனுதாபத்தைப் பெற்று ஆட்சிப் பீடம் ஏறியவர்கள் எலும்புக்கூடுகளை இனங்கண்டார்களே ஒழிய, அவர்களின் குடும்பங்களுக்கு இதுவரை எந்த உதவியும் செய்யவில்லை." — என்றும் அங்கு அவர் கூறினார். [உ]

## ஜனநாயக'ப--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சங்கற்பம் கொண்டிருப்பதாகக் கூறினார்கள்.

வடபகுதி மக்கள் பெரும் கஷ்டங்களையும், அவலங்களையும் அனுபவித்து வருகிறார்கள். அவர்களுக்கு உணவு வகைகளையும், அத்தியாவசிய சேவைகளையும் உடன் வழங்குமாறு நான் அரசாங்கத்தைக் கேட்கவுள்ளேன — என்றும் [illegible] தேவ கூறினார். (அ-7)

# கல்முனை பொலீஸ் பலப்படுத்தப்படுகிறது

அம்பாறை, பெப் 22

அம்பாறை மாவட்டத்தில் கல்முனைப் பொலீஸ் நிலையம் பலப்படுத்தப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

பொலீஸ் நிலையத்தைச் சூழ புதிதாக மண் மூடைகள் அடுக்கப்படுகின்றன; காவலரண்களும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

கடந்த சில தினங்களாக பொலீஸார் இத்தகைய பலப்படுத்தும் நடவடிக்கைகளில் முழு மூச்சாக ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை சம்மாந்துறை பொலீஸ் நிலையமும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

ரஞ்சன் விஜேரத்னா கொலை

# இன்னொரு ஆணைக்குழு விரைவில் நியமிக்கப்படும்

கொழும்பு, பெப் 22

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவின் படுகொலை குறித்து விசாரிக்க இன்னொரு விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவை அரசாங்கம் நியமிக்கும் சாத்தியக் கூறு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மிக விரைவில் இந்த ஆணைக்குழு நியமிக்கப்படும் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அவரின் கொலை தொடர்பாக பல ஐயங்கள் எழுப்பப்பட்டிருப்பதாகவும் அப்பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை — முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் படுகொலை தொடர்பாக விசேட ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை இன்னும் அரசு நியமிக்காதிருந்து வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ)

## இனவிவகார அமைச்சின் காரியாலயம்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் கடந்த வாரம் கொழும்பில் திறந்து வைக்கப்பட்ட இனவிவகார, நல்லிணக்க அமைச்சின் காரியாலயக் கட்டடத்திலேயே வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணிக் குழுவின் அலுவலகமும் இயங்கவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. [க-5]

# சிசில் வைத்தியரத்னா மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள்!

கொழும்பு, பெப். 22

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சிசில் வைத்தியரத்தின பதவியில் இருந்த காலத்தில் இடம்பெற்ற மோசடிகள், ஒழுங்கீனங்கள் ஆகிய பாரதூரமான குற்றச்சாட்டுகள் குறித்து அவர்மீது விசாரணை நடைபெற்று வருவதாக சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்க நிதி துஷ்பிரயோகம் மற்றும் பல கோடி ரூபா பெறுமதியான சட்டவிரோத கேள்விப்பத்திரக் கொடுக்கல் — வாங்கல்கள் ஆகியவை தொடர்பான மோசடிகளே இடம்பெற்றுள்ளன.

இவை குறித்து இரகசியப் பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஏழு கோடி 20 லட்ச ரூபா வெளிநாட்டு நாணய மாற்றுச் செலவீனத்தில அதிசக்தி வாய்நத திசையறி கருவி கொள்வனவு செய்யப்பட்டதில் 2 கோடி 40 லட்ச ரூபா கையாடப்பட்டுள்ளது தொடர்பாகவும் அவர் மீது விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

சட்டவிரோத வானொலி ஒலிபரப்பைக் கண்டு பிடிப்பதற்கான — நிலத்திலும் ஆகாயத்திலும் பயன்படுத்தக் கூடிய — சக்திவாய்ந்த உபகரணம் பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டது. இந்த உபகரணம் செயற்படாமல் போனதால் இதன் தயாரிப்பாளர்கள் மாற்று உபகரணம் ஒன்றை வழங்கியிருந்தார்கள்.

இந்நவீன உபகரணத்தைக் கொள்வனவு செய்வதில் வழமையான கேள்விப்பத்திர நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படவில்லை என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மலேசிய நிறுவனம் ஒன்றிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட தரங்குறைந்த உணவு வகைகள் குறித்தும்—

இராணுவத்தின் கம்பியூட்டர் மயத்திட்டத்திற்கென செயலாற்று அறிக்கையிலே பல இராணுவப் பயிற்சி முனைகளிலிருந்து வழங்கப்பட்ட 5 லட்சம் ரூபா பணம் குறித்தும் —

விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

இவ்விசாரணைகள் காரணமாக ஜெனரல் சிசில் வைத்தியரத்தினாவை நாட்டை விட்டு வெளியேற வேண்டாம் என கடந்த வெள்ளியன்று கொழும்பு நீதவான் ஒருவர் உத்தரவு பிறப்பித்திருந்தார் என்பது தெரிந்ததே (உ-7)

## ஆலயங்களில்

கொழும்புத்துறை, பெப் 22

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலயமாகாந்த அனுஷ மஹாலக்ஷ்மி விசேட அபிஷேகம் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். [ஐ-30-14]

## தி. மு. க. ஆர்ப்பாட்டம்

சென்னை, பெப். 22

ஸ்ரீலங்கா கடற்படை இந்திய மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்துவதைக் கண்டித்து தி மு க. ஏற்பாட்டில் சென்னையில் நூற்றுக்கணக்கானோர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்

கடந்த ஐந்து ஆண்டுகளில் 25 இந்திய மீனவர்களை ஸ்ரீலங்காப் படைகள் இவ்வாறு சுட்டுக் கொன்றுவிட்ட [illegible] முன்னேற்றக் கழக [illegible] தார். [உ-7]

## மாவுடன் "ஹபரண" நாளை வரும்

யாழ்ப்பாணம், பெப். 22

திருகோணமலையில் இருந்து ஆயிரத்து 950 மெற்றிக் தொன் மாவுடன் "ஹபரண" கப்பல் இன்று [illegible] நாளை பருத்தித்துறைக்கு வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. [உ-4]

## "மாஹோா" வந்தது

"மாஹோா" கப்பல் பலவகைப் பொருள்களை ஏற்றிக் கொண்டு நேற்று பருத்தித்துறை வந்துசேர்ந்தது.

இக்கப்பலில் தபால் பொதிகளும் வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏற்றிவரப்பட்ட பொருள்கள் விபரப்பட்டியலில் தபால் பொதிகள் பற்றிக் குறிப்பிடப்படாத போதும், தபால் பொதிகளும் எடுத்து வரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-173)


நன்றி நவிலல்

அளவெட்டி வடக்கு
கூத்தஞ்சிமா

திருமதி
செல்லையா இளையாச்சி

14 - 02 - 1995 இல் சிவ ஐக்கியம் அடைந்த எனது தாயாரின் இறுதிச் சடங்குகளில் பங்கு பற்றி, உதவி ஒத்தாசை புரிந்து, சிறப்பித்த உறவினர்கள், நண்பர்கள், உற்றவர்கள், புதிய அயலவர்கள், அனைவர்க்கும் எமது இதயம் நிறைந்த வணக்கத்தையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

செ. குமாரசாமி
(பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர்)

17 - 02 - 1995
தற்போதைய
இடம்பெயர்ந்த முகவரி,

நந்தாவில் அம்மன் கோயில் றோட்,
(சாம்பியன் ஒழுங்கைச் சந்தி),
கொக்குவில் கிழக்கு.

[35305]



யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டதாரிப் பிரிவு

464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

A/L 95 கணக்கியல்

பரீட்சை எதிர்பார்க்கை வினாக்களுடன்
கூடிய இரண்டாவது விரிவுரை
22-02-95 புதன் மாலை (இன்று) 3 — 5

விரிவுரை: திரு. V. உருத்திரசிங்கம்
B. Com (Cey)

முக்கிய குறிப்பு;- மாணவர்கள் முன் கூட்டியே அனுமதியைப் பெற்று விரிவுரை நேரத்தில் ஏற்படும் கால தாமதங்களையும் சிரமங்களையும் தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

[சி/599] — DIRECTOR —



உ

யா/மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பழை

வருடாந்த
இல்ல மெய்வல்லுநர்
போட்டி - 1995

காலம்:-
24 - 02 - 1995 வெள்ளிக்கிழமை
பிற்பகல் 1.00 மணி

இடம் :-
மகாஜனக் கல்லூரி மைதானம்
[இணுவில் கந்தசுவாமி கோவில் முன்றில்]

தலைவர்:-
திரு. க. நாகராசா அவர்கள்
(கல்லூரி அதிபர்)

முதன்மை விருந்தினர்:-
வைத்திய கலாநிதி
திரு. சி. சிவசுப்பிரமணியம் அவர்கள்
(போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்)

சிறப்பு விருந்தினர்கள்:-
திரு. த. துரைசிங்கம் அவர்கள்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
தெல்லிப்பழைக் கோட்டம்)
திரு. சி. தமிழ்மறவன் அவர்கள்
(பொறுப்பாளர், விடுதலைப் புலிகள்
மாணவர் அமைப்பு, யாழ் மாவட்டம்)

பரிசு வழங்கல்:-
திருமதி ஜெகஜோதி சிவசுப்பிரமணியம்
அவர்கள்

யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.

(சி 594)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org